ரூ.10/-

# காத்திருக்கச் சொன்னாயே!





**இந்திரா சௌந்தர்ராஜன்**






இந்திரா
சௌந்தர்ராஜன்

## 1 காதல் ஒரு பருவக் கிறுக்கு

ஒருவழியாக அந்த டெம்ப்போ வேன் புறப்பட்டது.

அதனுள்ளே வழிய வழிய சாமான்கள்.

பக்கவாட்டில் 'ரவி பேக்கிங் அண்ட் மூவர்ஸ்' என்கிற சிகப்பு எழுத்துக்கள்.

அந்த வேளை ஒரு மாருதி டாக்சியும் பின்தொடரத் தொடங்கியது. டாக்சிக்குள்ளே காஞ்சனா, கனிஷ்கா என்று இரு பெண்கள். பெயரிலேயே யாருக்கு எவ்வளவு வயது என்பது ஓரளவு அர்த்தமாகியிருக்கும்.

இந்தக் காலத்தில் காஞ்சனா என்றெல்லாம் யார் பெயர் வைக்கிறார்கள்? அதுவே காஞ்சனாவை வயதானவளாகக் கருதப் போதுமானது.

*கனிஷ்கா!*

பெயரில் மட்டும் புதுமை என்றில்லாமல் உருவத்திலும் புதுமையான பெண்ணாகத்தான் தெரிந்தாள். ஜீன்ஸ் பேண்ட், டிஷர்ட், அந்த டி ஷர்ட்டிலும் 'ஐ ஹேவ் நோ ஃபியர்!' என்கிற ஓர் அவசியம் இல்லாத ஸ்டேட்மென்ட்.

சினிமா நடிகைகள் போல - தலையை சேர்த்துக் கட்டி பின்னிக்கொள்ளாமல் - அப்படியே காற்றாட விட்டிருந்தாள். அது முகத்தில் விழுந்து விழுந்து மறைக்கும் போதெல்லாம் ஒதுக்கிவிட்டுக் கொள்ளும் அவஸ்தை எதனாலோ பிடித்திருந்தது.

ஆனால் அவள் அம்மாவான காஞ்சனா அப்படியெல்லாம் இல்லை. தலையை இறுக்க வாரி பின்னியிருந்தாள். நெற்றியிலும் பட்டாணி சைஸுக்கு ஒரு ஸ்டிக்கர் பொட்டு. கண்களில் கொஞ்சம் காய்ந்து விட்டது போல ஒரு வறட்சியும் கொஞ்சம் வற்றிப் போன கழுத்துமாய், வாழ்க்கையில் மிகவும் அடிபட்டு விட்ட ஒரு பெண்மணியைப் போலவே இருந்தாள்.

அந்த அபார்ட்மெண்ட் கட்டிடத்தை விட்டு வீட்டுச் சாமான்களோடு கிளம்பும்போது



சிறிதுநேரம் வரைதான் அவளால் தாக்குப் பிடிக்க முடிந்தது. அதன்பின் பொல பொலவென்று கண்ணீர் உதிரத் தொடங்கிவிட்டது.

இருந்தும் அதைக் கனிஷ்கா பார்த்துவிடப் போகிறாளே என்கிற ஒரு சன்னமான வெட்கம் அவளை முகத்தைத் திருப்பிக்கொள்ள வைத்தது. கனிஷ்கா மறுபுறமாய் வெளியே பார்த்துக் கொண்டே வந்தாள்.

அவள் அதுநாள் வரையில் வாழ்ந்த ஊரான சேலம் நழுவியபடி இருந்தது.

"என் மம்மி... மதுரைக்கு நாம் எத்தனை மணிக்கு போய்ச் சேருவோம்?"

"எப்படியும் ஃபைவ் அவர்ஸ் ஆகுண்டா..."

திரும்பாமலே கண்ணீருடன் பதில் சொன்னாள் காஞ்சனா.

"என்ன அழுவுறியா?" -கனிஷ்காவிடம் கச்சிதம்.

"சேச்சே... அதெல்லாம் ஒண்ணுமில்ல..." - காஞ்சனாவிடம் சமாளிப்பு.

"புளுகாதே... எங்க என்னைப் பார்..." - பேச்சோடு காஞ்சனாவின் கன்னத்தைப் பிடித்து திருப்பினாள். திருப்பிய கைவிரல்கள் மேல் கண்ணீர்ப்பொட்டுகள் உருண்டன.

"ஆமா! இது என்ன...? பைத்தியம்?" - கனிஷ்கா சிரித்தபடியேதான் கேட்டாள்.

"அதுசரி... உனக்கு இந்த ஊரைப் பிரியற வருத்தம் இல்லையா கனி..."

"எதுக்கு வருத்தப்படணும்? உனக்கு ஆனாலும் சாஃப்ட் ஹார்ட் அம்மா. அதான் ஒண்ணும் இல்லாததுக்கு எல்லாம்

வருத்தப்படறே..."

"நீ பிறந்தது வளர்ந்தது எல்லாமே இங்கதான் கனி. கல்யாணமாகி நான் வந்ததுல இருந்து சேர்ந்தாப்பில பத்துநாள் இந்த ஊரை விட்டுப் பிரிஞ்சு இருந்தது கிடையாது.. ஆனா இனி எப்ப வருவோமோ...?" காஞ்சனா கேட்கும்போதே ஒருவித பொருமல்.

"ப்ளீஸ்மா.. ஊர்ங்கறது ஒருவித மெடீரியல். மெடீரியல் மேலெல்லாம் நமக்கு பற்றுதலே வரக்கூடாது. இதே கட்டடங்கள், தெருக்கள், மனுஷங்கதான் மதுரைலயும் இருக்காங்க. நாம என்ன ஆளரவமே இல்லாத பாலைவனத்துக்காக ட்ரான்ஸ்ஃபர் ஆகிப் போறோம்."

கனிஷ்காவின் பேச்சு மிக மெச்சூர்டாக இருந்தது. இருபது வயதுதான் ஆகிறது. ஆனாலும் நாற்பது வயது அனுபவசாலி மாதிரி அவள் சிந்திப்பதும் பேவதும் காஞ்சனாவுக்கு எப்பொழுதுமே மிகப் பிடிக்கும். இப்பொழுதும் அவள் அப்படிப் பேசியது மிகப் பிடித்திருந்தது.

"ஜாப் ட்ரான்ஸ்ஃபர்ங்கறது லைஃப்ல ஒரு பார்ட் என்னக் கேட்டா ஒரு வருஷத்துக்கு ஒரு ஊர்னு போகணும். எல்லா ஊர்லயும் வேலை பர்ர்த்து நம்ப எக்ஸ்ஃபோஷரை டெவலப் பண்ணிக்கணும். இல்லேன்னா குட்டைத்தண்ணி மாதிரி தேங்கிடுவோம்..." திரும்பவும் அவளே வருடித்தருகிற மாதிரி பேசினாள். டிரைவர்கூட ஒரு அர்த்தபுஷ்டியுள்ள பார்வையை அவளை நோக்கிப் பார்த்தான். காஞ்சனா அதைக் கவனித்தாள்.

"என்ன டிரைவர்.. ஏதாவது வேணுமா?" - கேட்டாள்.



"ஒண்ணுமில்லம்மா, பாப்பா பேச்சை ரொம்ப ரசிச்சேன். அதான் திரும்பிப் பார்த்தேன்."

"ரசிச்சியா... இல்ல இந்த வயசுல பாட்டி மாதிரி பேசறாளேன்னு நினைச்சு மனசுக்குள்ள கோபப் பட்டியா?"

"தப்பும்மா... பாட்டிங்கல்லாம் இப்படி நறுக்கு தெறிச்ச மாதிரி பேசமாட்டாங்க. அது வாயரட்டை! இது வேற.. பாப்பாக்கு புத்தி கத்தி மாதிரி.. அது சொல்றதுதான் கரெக்ட்..."

"கனி.. உனக்குக்கூட ஒரு ரசிகர் கிடைச்சுட்டார் பாரு.." காஞ்சனா கனிஷ்காவை உற்சாகமசுச் சீண்டினாள். கனிஷ்கா உடனே தன் 32ஐக் காட்டாமல் ஒரு தெற்றுச் சிரிப்பு சிரித்துவிட்டுப் புறத்தில் பார்த்தாள்.

காரிட்ம் சமாரான வேகம்.

காற்று படபடவென்று முகத்தில் அறைந்தபோது காதோரமாய் படபடவென்று சப்தமும் கேட்டது. அது காற்றின் குரலாக இருக்கக்கூடும் என்று நினைத்துக் கொண்டாள்.

"ஆமா... சார் என்னம்மா பண்றாரு?" டிரைவர்தான் சகஜமாக பேச ஆரம்பித்தான்.

"சாரா...?"

"ஆமாம்மா... பாப்பாவுக்கு அப்பாவைக் கேட்டேன்."

உடனேயே காஞ்சனாவிடம் ஒரு தேக்கம், திணறல். அதன் எதிரொலியாக மௌனம்!

"அட... எதுக்கும்மா இந்த மௌனம்? அப்பா உயிரோட இல்லைங்கறத சொல்றதுக்கு இவ்வளவு தயக்கமா?"

கனிஷ்காவின் குறுக்கீடே டிரைவருக்கு

உண்மையை சொல்லாமல் சொல்லிவிட்டது.

"அட... சார் இல்லீங்களா? நான்தான் தெரியாம கேட்டுட்டேன்.. சாரிம்மா." என்றான் டிரைவரும் படுவேகமாக.

"எதுக்கு சாரியும் பூரியும். நீங்க கேட்டதுல ஒண்ணும் தப்பும் இல்ல. செத்துப் போய்ட்ட அப்பாவை செத்துட்டார்னு சொல்றதுல எது குறைஞ்சுடப் போகுது?"

"அப்ப மதுரைக்கு ட்ரான்ஸ்ஃபர்ல போறது, யாரு பாப்பா?"

"அம்மாதான்- இந்த அழுவாச்சி அம்மாவை யார்னு நினைச்சீங்க. காலேஜ்ல புரொபசர் இவங்க! அதுலையும் அம்மா இங்கிலீஷ் புலி. மதுரைல ஒரு புலி இருந்து எங்கியோ ஓடிப் போயிடுச்சாம். இந்தப் புலியை அங்க வரச் சொல்லிட்டாங்க."

"அப்ப வீடெல்லாம் பார்த்தாச்சிங்களா?"

"பார்க்காமத்தான் சாமான்லாம் முன்னால டெம்ப் போல போகுதா?"

"ஓ- நான் ஒரு மடையன்... ஆமா மதுரைல எந்த ஏரியாலம்மா வீடு பார்த்துருக்கீங்க."

"காலேஜ்க்கு பக்கத்துலையே... அது என்ன ஏரியா, ஆங் சாந்தி நகர்!"

"மதுரை கூடல் நகர் ஏரியா கிட்டையா?"

"உங்களுக்கு மதுரைல எல்லா இடமும் பரிச்சயமா?"

"என் ஊரே மதுரைதானேம்மா.."

"அப்புறம் ஏன் சேலத்துல டாக்சி ஓட்டணும்?"

"அங்க ஒரே போட்டியா போச்சும்மா.



இன்னிக்கெல்லாம் படிப்புக்கு சம்மந்தமில்லாத ஒரே தொழில் இதானே?"

"அதானல..?"

"என்னம்மா அதனால..? இரண்டு இளவட்டப் பயலுக ஒண்ணா சேர்ந்தா ஒண்ணு ரசிகர் மன்றம் வைக்கிறானுங்க. இல்லாட்டி ஆட்டோ, டாக்ஸின்னு வாங்கிகிட்டு ஊரைச் சுத்த ஆரம்பிச்சுட்றாங்க. இதுக்கென்ன சாதியா, மதமா? இல்ல இண்டர்வியூவா, பரிட்சையா..?"

"அது எப்படி- ஆர்.டி.ஓ.கிட்ட லைசென்ஸ் வாங்கணுமில்ல?"

"அது ஒரு விசயமாம்மா... ஒரு இரண்டாயிரம் தாங்க, உங்களுக்கு ஒரு லைசென்ஸை நான் வாங்கிட்டு வந்து தர்றேன்."

"ஆமா... நானும் கேள்விப்பட்டிருக்கேன். அந்த ஆபீஸ்ல சுவர், ஜன்னல் அதுல இருக்கிற கம்பிங்கல்லாம் கூட லஞ்சம் 'கேட்கும்னு கேள்விப்பட்டிருக்கேன்."

"பின்ன..."

"ஏம்ப்பா.. சாந்தி நகர் ஏரியா எப்படி..?"

"அமைதியான ஏரியாம்மா. பெரும்பாலும் தனித்தனி வீடுங்கதான். டீசன்ட்டான மக்கள். பொதுவில மதுரையே ஒரு ஜாலியான ஊர்தானேம்மா.."

"ஜாலியான ஊரா.. அப்பிடின்னா?"

"மதுரைலதானே இனி இருக்கப் போறீங்க. நீங்களே புரிஞ்சுக்குவீங்க."

டிரைவர் பதிலோடு காரிடம் சற்று வேகத்தைக் கூட்டினான். அந்தக் காரை ஒரு மோட்டார் பைக் இளைஞனும் பின்தொடர்ந்து

கொண்டிருந்தான்.

கனிஷ்காவும் மெல்ல திரும்பித் திரும்பிப் பார்த்து அவன் . வருகையை உறுதி செய்துகொண்டு ஒரு மாதிரி ரகசியமாகவும் சிரிக்கவும் செய்தாள்.

## 2 காதல்! இது ஒரு வாலிப மின்சாரம்

சரியாக அந்த பிளாட் வீட்டின் முன் டெம்ப்போ வேன் கிருச்சிட்டு நிற்க, பின்னாலேயே கனிஷ்கா, காஞ்சனாவின் காரும் வந்து நின்றது.

பிளாட்டின் முன்னால் பக்கத்து வீட்க்காரப் பெண்மணி ஒருத்தி அவர்களுக்காகவே காத்திருந்தாள்.

காஞ்சனா காரைவிட்டு இறங்கியதும் அவளை நோக்கித்தான் சென்றாள்.

"வந்துட்டீங்களா..."

"வந்துட்டே இருக்கோம். எல்லாம் ரெடியா?"

"எல்லாம் ரெடி நீங்க சொன்னமாதிரியே ஆளை வெச்சு வீட்டை சுத்தமா கழுவி விட்டுட்டேன். அடுப்படியில் ஸ்டவ்வும் பாலும் தயாரா இருக்கு. நல்ல நேரத்துலதான் வந்துருக்கீங்க. போய் முதல்ல பாலைக் காச்சுங்க. அப்புறமா சாமானை இறக்கலாம்..."

அந்தப் பெண்மணியின் பேச்சும் அதில் வழிந்த அன்பும் இணக்கமும் காஞ்சனாவுக்கு நெகிழ்வை உண்டு பண்ணியது.



"உங்களுக்கு ரொம்ப நன்றிங்க..." என்றாள்.

"அட எதுக்குங்க பெரிய வார்த்தையை எல்லாம் சொல்லிகிட்டு..." என்று அந்த பெண்ணும் ஒரு சிரிப்பு சிரித்தாள்.

கனிஷ்கா வீட்டைப் பார்த்து மிரண்டு போயிருந்தாள். தனி வீடு..! வீட்டைச் சுற்றிலும் காம்பவுண்ட் சுவர். உள்ளே வாழை, கொய்யா, சப்போட்டா, மருதாணி என்று எல்லாவித பழமரங்களும் கொழித்து வளர்ந்திருந்தன.

செம்பருத்தி, நந்தியாவட்டை என்று பூச்செடிகளுக்கும் பஞ்சமில்லை.

"அம்மா... எப்படிம்மா இப்படி ஒரு வீட்டைப் பிடிச்சே. சூப்பர்" என்றாள் படு உற்சாகமாக.

"இவதான் என் மக- கனிஷ்கா!"

காஞ்சனா மறந்துவிட்ட மாதிரி அவளை அறிமுகம் செய்ய, "ஹாய் ஐ ஆம் மரகதம் எம்.காம்" என்றாள், அந்தப் பெண்மணியும் கையை நீட்டிக்கொண்டே அதுவரை தமிழில் பேசியவள் இங்கிலீஷ்க்கு மாறியதால் அவளுக்கு இருக்கும் காம்ப்ளக்ஸ் நொடியில் புரிந்து விட்டது கனிஷ்காவுக்கு.

"மரகதம்... மிக அழகான பெயர். பழமையான பெயரும் அது.நன்று" என்றாள் நல்ல தமிழில். அப்படி அவள் பேசியதும் அவளைக் கொஞ்சம் மூக்கறுத்த மாதிரியும் இருந்தது.

"நீங்க இங்கிலீஷ்ல பேசினீங்கல்ல. அதான் உடனே அதுக்கு நேர்எதிரா தமிழ்ல பேசி உங்களை கலாய்க்கறா. தப்பா எடுத்துக்காதீங்க" என்று உடனேயே வக்காலத்து வாங்கினாள்

காஞ்சனா.

"ஐயோ-நான் இந்த மாதிரி விளையாட்டை எல்லாம் ரொம்ப ரசிப்பேன்" என்று மென்று விழுங்கியபடியே வீட்டினுள் நுழைந்தாள் அந்த மரகதம். காஞ்சனாவும் கனிஷ்கா மட்டும் வாசலிலேயே தேங்கி நின்று மெல்லத் திரும்பிப் பார்த்தாள்.

வேனில் வந்தவர்கள் ஒரு ஓரமாகச் சென்று பீடி பற்ற வைத்துக் கொண்டிருந்தார்கள்.

அந்த வீடு அமைந்திருக்கும் தெருவின் முகப்பில் ஒருவன் மோட்டார் பைக் மேல் அமர்ந்த நிலையில் தெரிந்தான்.

அவனை கனிஷ்கா பார்த்த நொடி "சேலத்துல இருந்து விடாம நம்ம காரோடையே வந்த யூத்தும்மா அது.. உங்களுக்குத் தெரியுமா?" கார் டிரைவரிடமிருந்து திடீரென்று வந்த கேள்வியால் ஒரு வினாடி திணறி விட்டாள் கனிஷ்கா. டிரைவர் முகத்திலோ ஒரு அர்த்தமுள்ள பார்வை.

"அது- அது-"

"தடுமாறாத பாப்பா. எல்லாம் நானும் அந்த வயசைக் கடந்து வந்தவன்தானே?"

"நோ... நோ... நீங்க என்ன ஏதேதா சொல்லிகிட்டு...? அவன் யார்னே எனக்குத் தெரியாது." கனிஷ்கா வேகமாக கையை உதறிக்கொண்டு உள்ளே சென்றாள். அவனுக்கு சிரிப்புதான் வந்தது. சிரித்தபடியே காரில் டிக்கியில் இருந்த சாமான்களை இறக்கத் தொடங்கினான்.

"இங்க நீங்க குடி வந்ததுல எனக்குதான் ரொம்ப சந்தோஷம்." அந்த மரகதம் வழிந்து



கொண்டிருந்தாள்.

"என் பொண்ணு இங்கிலீஷ்ல ஆனாலும் வீக். எங்கையாவது ட்யூசன் அனுப்பலாம்னா அதுக்கும் தைரியமில்ல. வயசுப் பொண்ணை எப்படி நேரங்கெட்ட நேரத்துல வெளிய அனுப்பறது" மரகதம் தொடர்ந்து பேசப்பேசவே அவள் சாயம் மெல்ல வெளுக்க ஆரம்பித்தது. கனிஷ்கா சிரித்துக் கொண்டாள்.

வலிய வந்து அவளாக வீடு பார்த்துக் கொடுத்து வாடகையிலும் பேரம் பேசி காஞ்சனாவுக்கு அவள் உதவி செய்தபடி இருப்பதன் பின்னணியில் அவள் மகள் இருப்பதை அறிந்து கொண்டபோது எரிச்சலாகவும் வந்தது.

காஞ்சனா அவள் பேச்சைக் கேட்டபடியே ஸ்டவ் பற்ற வைக்க ஆரம்பித்திருந்தாள்.

"அந்த வேன்ல வந்தவங்களை உள்ள கூப்ட்டு உட்காரச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்க. அவங்களுககும் ஒரு வாய் பாலைக் கொடுப்போம்."

"காபியா கொடுத்துடுங்களேன்னு சொல்லப் போறாங்க."

"கொடுத்துட்டா போச்சு... ஆமா உங்க வீட்ல இருந்து யாரும் வரலியே?"

"அவர் ஆபீஸ் போய்ட்டாரு. மக காலேஜ்க்கு போயிருக்கா."

"பிஎஸ்சி. பிசிக்ஸ்னு சொன்னீங்கல்ல?"

"ஆமாம். சாயந்தரம் வந்துடுவா. கூட்டிக்கிட்டு வரேன்."

"கவலைப்படாதீங்க. அவளுக்கு இனி நான்

ட்யூசன் எடுக்கறேன்."

அவர்கள் பேசிக்கொள்ள கனிஷ்கா மெல்ல வீடு முழுக்க ஒரு பார்வை பார்த்து முடித்துவிட்டு வந்தாள்.

"ஏய்.. சாமானை எல்லாம் கரெக்டா பார்த்து எடுத்து வைக்கணும். இப்பவே எங்க எதை வைக்கலாம்னு கவனி."

"டோன்ட் ஒரிம்மா.. அவங்க இறக்கிட்டுப் போகட்டும். நான் அரேஞ்ச் பண்ணிக்கறேன்" என்றபடியே மெல்ல மாடிப்படியில் ஏறினாள். வளைந்து வளைந்து மேலே ஏறியது படி. படியின் முடிவில் மொட்டை மாடிக்கு அழைத்துச் செல்லும் தடுப்புக் கதவு.

திறந்தாள்.

ஜில்லென்று காற்று முகத்தில் பட்டு சிலிர்ப்பை ஏற்படுத்தியது. அப்படியே நடந்தாள். இடுப்புயர கைப்பிடிச் சுவரிடம் போய் நின்று சுற்றுமுற்றும் பார்த்தாள். பின்னாலேயே ரயில்வே லைன். அங்கிருந்து கைதட்டல் சப்தம் வேறு கேட்டது. திரும்பினாள். இரு தண்டவாளங்களுக்கு நடுவில் இடுப்பில் கை வைத்தபடியே அந்த மோட்டார் பைக் இளைஞன்.

அவனைப் பார்த்த நொடி அவள் முகத்தில் ஒரு இன்ப அதிர்ச்சி.

காற்றுக்குரலில் 'போயிடு... போயிடு' என்றாள் கையை ஆட்டியபடியே.

அவனோ நிதானமாக தான் அணிந்திருந்த கூலிங் கிளாஸைக் கழற்றி அதைத் துடைக்க ஆரம்பித்தாள். அதேசமயம் அந்த லைனில் ஒரு



ரயிலானது தூரத்தில் வரும் சப்தமும் கேட்டது. அவளுக்குப் பதைக்க ஆரம்பித்துவிட்டது. காற்றுக்குரலை கைவிட்டு கத்தவே ஆரம்பித்தாள்.

"ராம்.. வேண்டாம் திரும்பிப் போ.." அவன் அசரவேயில்லை. ரயில் வரும் சப்தமும் நெருக்கமாகக் கேட்க ஆரம்பித்தது. சினிமாவில் வரும் காட்சி மாதிரியே இருந்தது. ஆனால் சினிமாவில் பில்டப்தான் பெரிதாக இருக்கும். இறுதியில் யாராவது ஓடிவந்து இப்படி நின்று கொண்டிருப்பவர்களைத் தள்ளிவிட்டு காப்பாற்றி விடுவார்கள். இங்கும் அப்படித்தான் நடக்கப் போகிறதா.. இல்லை..

"ராம் வேண்டாம் தள்ளி நில்லு." அலறினாள்.

"ஐ லவ் யூன்னு சொல்லு" அவனும் பதிலுக்கு அலறினான்.

"அய்யோ... தள்ளுடா... ட்ரெய்ன் கிட்ட வந்துருச்சி பாரு."

"ஐ லவ் யூன்னு சொல்லு"

"ஓ.கே. ஐலவ் யூ" அவள் சொல்லி முடித்த நொடி அவன் தண்டவாளத்தை விட்டு விலக ரயிலும் அந்த இடத்தைக் கடக்க ஆரம்பித்திருந்தது.

அப்பர்டா என்று இருந்தது கனிஷ்காவுக்கு. பெருமூச்சுடன் திரும்பினாள். கொஞ்சம் பகீரென்றது. பக்கத்துவீட்டு மொட்டை மாடியில் இருந்து ஒரு நாற்பத்தி ஐந்து வயது மதிக்க முடிந்த நபர் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். கனிஷ்காவுக்கு வெட்கமாகி விட்டது. வேகமாக மாடியில் இருந்து கீழே இறங்கத் தொடங்கினாள்.

## 3 காதல்! இது ஒரு கிரியா ஊக்கி

கீழே அந்த மரகதம் ஊதி ஊதி பால் குடித்ததபடி இந்தாள். அருகிலேயே காஞ்சனா. "அதுக்குள்ள எங்க போய்ட்டே. இந்தா இந்த பால் டம்ளருங்களை நம்ம வேன்ல வந்தவங்க, கார் டிரைவர் எல்லாருக்கும் கொடு" காஞ்சனா டம்ளர்கள் நிரம்பிய தட்டை எடுத்து கனிஷ்காவிடம் தந்தாள். கனியும் மறுக்கவில்லை. லாவகமாக வாங்கிக்கொண்டு நாட்டியக்காரி போல நடந்து வெளியே சென்றாள்.

முகப்பில் சப்போட்டா மரத்தினடியில் வேனில் வந்தவர்கள் நின்று கொண்டிருந்தனர். ஒருவன் மட்டும் ஒரு சப்போடட்ா பழத்துக்காக எம்பி எம்பி குதித்துக் கொண்டிருந்தான்.

கனிஷ்கா வரவும் வளைந்து நெளிந்தான். "பால் எடுத்துக்குங்க" சற்றுக் கடுமையான குரலில் சொன்ன விதமே 'பழத்தைப் பறிக்கக் கூடாது' என்றும் சொல்லாமல் சொல்லிற்று.

ஆளுக்கு ஒரு டம்ளரை எடுத்துக் கொண்டார்கள். மீதி ஒரு டம்ளர் இருந்தது. அது கார் டிரைவருக்கு. அவன் எங்கே என்று வீதியில் நிற்கும் காரைப் பார்த்தாள். அவன் கார் அருகில் இல்லை!

'எங்கே போய்விட்டான்?'

அவள் பார்வை சுழற்சியில் அவனும் அகப்பட்டான். ஆனால் கொஞ்சம் அதிர்ச்சியும் அளித்தான். சிரிக்க சிரிக்க அந்த மோட்டார்பைக் இளைஞனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"டிரைவர்..." அலறினாள்.



திரும்பிப் பார்த்தான்.

"பால் எடுத்துக்க வாங்க" கூப்பிடவும் லுங்கியை சரி செய்தபடியே வந்தான். முகத்தில் ஒருவிதமான விஷமச்சிரிப்பு. வந்தவன் அவளைக் கூர்மையாகப் பார்த்தபடியே பால் டம்ளரை எடுத்துக் கொண்டான்.

அவள் பார்வையோ அந்த மோட்டார் பைக் இளைஞன் மேல் போயிருந்தது.

"ராமு தம்பி நல்லா பேசுது" பாலை ஒரு சூப்பு சூப்பியபடி டிரைவர் சொல்லவும் களீர் என்றது.

"யார் அது ராமு?"

"போதும் பாப்பா... நான்கூட யாரோ டுபாக்கூர் பார்ட்டியோன்னு தான் நினைச்சேன். ஆனா நீங்க இரண்டு பேரும் ஒண்ணா இருக்கிற போட்டோவைக் காட்டுச்சு. பேங்க்குல வேலைல இருக்குதாம்ல. அம்மாகிட்ட சொல்லி கல்யாணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே....?" டிரைவர் படுவேகமாக சென்டர் பாயின்ட்டுக்கு வந்துவிட்டான். அதற்குமேல் அவனிடம் அவளும் நடிக்கத் தயாரில்லை. கொஞ்சம் போல வெட்கப்பட்டாள். "நான் ஒரு சாதாரண கார் டிரைவரு. ஆனா காதல்னா ரொம்பப் பிடிக்கும் என் மேரேஜ் லவ் மேரேஜ்தானே... எதுக்கு சொல்ல வர்றேன்னா உங்கம்மாகிட்ட நானே பேச்சை ஆரம்பிச்சிடுவேன் ஆனா யார் எந்த விஷயத்தை எப்டி எப்படி பேசணும்கறது ரொம்ப முக்கியம் பாப்பா. லவ்வுல அது ரொம்ப ரொம்ப முக்கியம். அதான் அடக்கிக்கிட்டுருக்கேன்" என்று ஆதரவாகவும் வேகமாகவும் பேசிய டிரைவரை

முதல்முறையாக ஒருவித அன்புடன் பார்த்தாள்.

"கொஞ்சம் இரு... பைக்கிலேயே உனக்காக சேலத்துல இருந்து உடாம வந்துருககுது. அந்தப் புள்ள. இந்தப் பாலை அதுக்குததான் கொடுக்கணும். கொடுத்துட்டு வர்றேன். ஒரு வழியும் சொல்லித் தரேன். அம்மா என்னை இன்னிக்கு இங்கேயே இருக்கச் சொல்லியிருக்காங்க. அதுகிட்ட மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்துக்கு வரச்சொல்றேன். நீயும் அந்த சாமான் வாங்கணும் இந்த சாமான் வாங்கணும்னு சொல்லிட்டு வா. தெப்பக் குளத்தாண்ட மீட் பண்ணலாம்" டிரைவர் பாதையும் போட்டுக் கொடுக்கத் திக்குமுக்காடி விட்டாள் கனிஷ்கா. அவனும் பால் டம்ளரோடு அவனை நோக்கி நடந்தான். 'நீ எங்கே சென்றாலும் அங்கே வருவேன்' என்று டயலாக் பேசியவன் நிஜமாலுமே வந்துவிட்டான்.

இவனை நம்புவதா வேண்டாமா என்றெல்லாம் ஒரு கட்டம் வரை நிறைய குழப்பம் இருந்தது கனிஷ்காவுக்கு... ஆனால் இப்படி வித்யாசமாக நடந்து கொண்டே அவைகளை எல்லாம் சுக்குநூறாக்கி விட்டான்.

அவளுக்கும் ஒரு கட்டத்தில் அவன் இல்லை என்றால் வாழ்க்கையே இல்லை என்றாகிவிட்டது. பாழாய்ப்போன ட்ரான்ஸ்ஃபர் வேறு இடையில்... அதை மிக சாதாரணமாக அவள் எடுத்துக் கொள்ளவும் ஒரு காரணமிருந்தது.

அந்தக் காரணம் ராமுவாகிய அவனுக்கும் மதுரைக்கு டிரான்ஸ்ஃபர் என்பதுதான்!

கூடிய சீக்கிரம் அவனும் மதுரைக்கு



வந்துவிடுவான். அதை நினைக்கும்போதே கனிஷ்காவுக்கு இனித்தது.

அப்படியே அன்றே அவனை மீனாட்சியம்மன் கோவிலில் சந்திக்கப்போவதையும் ஒரு வினாடி எண்ணிப் பார்த்தாள்.

மிக தித்திப்பாக இருந்தது.

எல்லார் மனத்திற்குள்ளேயும் ஒரு ஃப்ரேம் இருக்கிறது. அந்த ஃப்ரேமிற்குள் கச்சிதமாக் அடங்குகிற மாதிரி ஒருவனோ ஒருத்தியோதான் இந்த உலகத்தில் இருக்க முடியும். அப்படி ஒருவரை சந்திக்கும்போது தான் காதல் வந்துவிடுகிறது. அது வந்துவிட்டாலோ அவ்வளவுதான். காதல் நிறைய கனவுகளையும் கையைப் பிடித்து அழைத்து வந்து நிறுத்தி விடுகிறது.

அந்தக் கனவுகளைக் காணாமல் மட்டும் இருக்கவே முடியாது. காதலுக்குக் கூடவே சில பிரத்யேக குணங்களும் உண்டு. அது மலைமீது ஏறி குதிக்கக்கூடச் சொல்லும். கால் உடையும். கை போகும் என்கிற அச்சங்களே அப்பொழுது ஏற்படாது. ஒரு மகா பெரிய வீரமாய் அது தெரியும். கனிஷ்கா மட்டும் விதிவிலக்கா என்ன? பால் கொடுத்துவிட்டு கொஞ்சம் தன்னை மறந்தவளாக வீட்டுக்குள் தட்டுடன் நுழைந்தவளை காஞ்சனாவும் கவனித்தாள். கூடவே அந்தப் பக்கத்து வீட்டுக்காரி மரகதம்.

"உங்க பொண்ணுக்கு புது இடத்துக்கு வந்துருக்கோம்கற நெருடலே கொஞ்சம்கூட இல்லைபோல இருக்கு" என்று அவள் மிதப்புக்கு நடுவே பேசினாள். "அவ எப்பவுமே அப்படித்தான். ரொம்ப ரொம்ப ஃபோட்டிவ் அவ.

சின்ன விஷயத்துக்குக்கூட நான் ரொம்ப உணர்ச்சி வசப்படுவேன். ஆனா இவனோ கப்பலே கவிழ்ந்தாலும் கவலைப்பட மாட்டா.." காஞ்சனா மகளைப் பாராட்டுகிறாளா இல்லை குட்டுகிறாளா என்பதே தெரியவில்லை. குரலில் அப்படி ஒரு தொனி.

"நல்லது.. நீங்க சாமான் செட்டை இறக்கி அரேஞ் பண்ற வழியப் பாருங்க. நான் அப்புறமா வந்து சந்திக்கறேன்..." மரகதம் ஒருவழியாக நகர்ந்தாள். காஞ்சனாவும் வாசலுக்கு வந்து சப்போட்டா மரத்தின் கீழ் நிற்கும் வேன்காரர்களைப் பார்த்தாள்.

"என்னம்மா சாமானை இறக்கிடலாமா?"

"தாராளமா.. ஆமா எங்க கார் டிரைவர்?"

"அதோ ஒரு மோட்டார் பைக்காரரோட பேசிகிட்டு.." ஒருவன் சுட்டிக் காட்டினான்.

காஞ்சனாவும் கவனித்துவிட்டு ஆச்சரியமானாள். டிரைவரும் அவள் பார்ப்பதை வைத்து அவனிடம் இருந்து பிரிந்து வந்தான்.

"யார் அது.. தெரிஞ்சவரா?"

"இல்ல.. ஆமா.." டிரைவர் தடுமாறினான்.

"இல்ல...ஆமா... எதுக்கு இத்தனை தடுமாற்றம்?"

"இல்லம்மா... அது தெரிஞ்ச தம்பிதான். ரொம்ப நல்ல பிள்ள. இந்தக் காலத்துல இப்படி ஒரு பிள்ளைய பார்க்க முடியாது. பேங்க்குல வேலை பார்க்குது" -அவன் விலாவரியாக அவனது பயோடேட்டாவை சமர்ப்பிப்பது அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது. உள்ளே இருந்த கனிஷ்கா காதிலும் கூட அவன் அப்படி பேசியது விழுந்தது.



அவன் அவளுக்கு மனப்பூர்வமாக உதவத் தயாராகிவிட்டதை உணர்ந்து அதற்காக அவனைக் கனிவோடு பார்க்கவும் அவள் தயாரானாள். அதற்குள் அவனே சமாளித்தவனாக, "நீங்க போங்கம்மா. எவ்வளவு வேலைங்க இருக்கு. நான் ஒருத்தன் உளறிகிட்டு நிக்கிறேன்" என்று அவனும் சாமானை எடுத்து வைக்கத் தயாரானான்.

சில மணி நேரத்தில் அவ்வளவு சாமான்களையும் இறக்கி இடம் பார்த்து வைத்தும் விட்டனர். கனிஷ்கா ரசனையோடு ஷோபா எங்கே வரவேண்டும். மேஜை நாற்காலி எங்கே வரவேண்டும், மோடா எங்கே போட வேண்டும் என்றெல்லாம் சொன்னது அவர்களுக்கு மிகுந்த ஆச்சரியமாகிப் போனது. இறுதியாக ஒரு ஐம்பது ரூபாய் கூடுதலாகவே வாங்கிக்கொண்டு ஒரு சலாம் போட்டுவிட்டு புறப்பட்டுச் சென்றனர். கார் டிரைவர் மட்டும காரில் ஸ்டீரியோவை போட்டுக் கொண்டு காத்திருக்க ஆரம்பித்தான்.

"அம்மா கார் டிரைவரை மெள்ளத்தானே அனுப்பப் போறே?" - ஒரு படத்தை மாட்ட ஆணி அடித்தபடியே கேட்டாள் கனிஷ்கா.

"ஆமாம்.. வந்தது வந்துட்டோம். மீனாட்சியம்மான் கோயிலுக்கு போய்ட்டு வந்தபிறகு அவனை அனுப்பிடலாம்" என்றாள் காஞ்சனா.

கனிஷ்காவுக்கு பகீர் என்றது.

"மீனாட்சியம்மன் கோயிலுக்கா?"

"ஆமாம்.. முதல் முதலா குடி வந்துருக்கோம் இல்லியா. மீனாட்சி இந்த ஊருக்கே ராணி. போய்ப் பார்த்து அட்டெண்டென்ஸ் கொடுத்துட்டு வந்துடுவோமே.."

"எப்போ.?"

"அதான் எல்லா சாமானையும் அடுக்கியாச்சே. குளிச்சுட்டு கிளம்ப வேண்டியதுதான். வழியில் ஒரு ஹோட்டல்ல இன்னிக்கு கதையை முடிச்சுகிட்டு அப்படியே காய்கறிய வாங்கிப் போட்டுகிட்டு வருவோம். நாளைல இருந்து சமையல ஆரம்பிச்சுடலாம்"- சொல்லிக் கொண்டே பாத்ரூம் நோக்கி நடந்தாள் காஞ்சனா.

கனிஷ்காவுக்கு புசுக்கென்றாகி விட்டது.

இடையே என்ன தோன்றியதோ - காஞ்சனா திரும்பி வந்தாள்.

"கனி... பக்கத்து வீட்டு ஆண்ட்டிகிட்ட போய் காய்கறி இங்க எங்க கிடைக்கும்னு கொஞ்சம் கேட்டுகிட்டு வாயேன்" என்றாள்.

பதிலுக்கு கனிஷ்காவிடம் ஒரு மாற்றம் கலந்த வெறிப்பு.

"எதுக்கு அப்படிப் பார்க்கறே...? அவங்க வளவளன்னு பேசறதா நினைக்கறே, அப்படித்தானே?"

"............"

"சரி... அப்படிப் பார்க்காதே. நானே ஓடிப்போய் தெரிஞ்சிட்டு வந்துட்றேன்" - காஞ்சனா அந்தப் பக்கத்து வீட்டுக்காரியின் வீட்டுக்கு செல்லத் தயாரானாள்.

வெளியே வந்து வலப்பக்கமாய் வீதியில் திரும்பி சில அடிகள் நடந்து பிறகு காம்பவுண்ட் கேட்டைத் திறந்துகொண்டு ஒரு வராண்டா போன்ற பாகத்தில் நடந்து உள்ளே செல்ல வேண்டியிருந்தது. ஒரு ஓரமாக போர்ட்டிகோவில் நல்ல ஆப்பிள் நிறத்தில் சாண்ட்ரோ ஒன்று நின்று



கொண்டிருநதது. அதன் பின் கண்ணாடியில் 'காத்திருப்பது சுகமானது" என்று பொதுவான ஒரு கருத்து. யாருக்காக, எதற்ககா என்பதெல்லாம் அதைப் பார்ப்பவர்களின் முடிவுக்கே விட்டுவிட்டது போலத் தோன்றியது.

அதை ரசித்தபடியே நின்றவளைப் பார்த்துவிட்டு ஓடிவந்தாள் மரகதம் என்ற அந்தப் பெண்.

"வாங்க... வாங்க..."

"ஒண்ணுமில்ல. ஒரு வழிய எல்லாத்தையும் செட் ரைட் பண்ணிட்டோம். கொஞ்சம் மளிகை காய்கறி மட்டும் வாங்கணும். இங்க எங்க வாங்கினா நல்லா இருக்கும்னு தெரிஞ்சுகிட்டுப் போக வந்தேன்."

"உள்ளே வாங்க. வாசல்லையே நின்னுட்டீங்களே."

அவள் அழைக்க காஞ்சனாலவும் நுழைந் தாள். வீட்டின் உள்பாகம் படுதிருத்தமாக - மிக நேர்த்தியாக இருந்தது. திம்முதிம்மு என்று பருத்த சோபாக்கள் அதில் நல்ல லாவெண்டர் வாசம்.

"உக்காருங்க."

"இருக்கட்டும். சாவகாசமா வர்றேன். நீங்க எந்த கடைன்னு மட்டும் சொல்லுங்க."

"இதே தெருவுலையே ஒரு ஷாப்பிங் காம்பள்க்ஸ் இருக்கு. அங்க புரொவிஷன்ஸ் குரோசரீஸ் வெஜிடேபிள்ஸ் எல்லாமே கிடைக்கும். ரொம்ப நல்லா இருக்கும்.

"தேங்க் காட். பக்கத்துலையே இருக்கு."

"ஆமாம். இப்பதான் அந்த காம்பளக்ஸ் வந்தது. இதுக்கு முந்தி வாரச்சந்தைல தான்

வாங்கிட்டு வரணும். இல்லாட்டி தத்தனேரி பக்கம் போக வேண்டியிருக்கும்."

"ஐ.சி... ஆமா வாசல்ல ஆப்பிள் கலர்ல சாண்ட்ரோ நிக்குதே. உங்களுதா?"

"என் தம்பியோட கார் அது- அவன் இந்த ஊர்லதான் எச்.ஆர்.டி. கன்சல்டன்டா இருக்கான்."

"அப்படியா. பேரு?"

"சந்துரு - கூப்பிட்றேன். உள்றதான் இருக்கான்."

"சந்துரு-" மரகதம் கொடுத்த குரல் மாடி வரை எதிரொலிக்க, நடுத்தரமான வயதுடைய ஒருவரும் "யெஸ் கமின்-" என்றபடியே வந்து நின்றார்.

"இவன்தான்.. சந்துரு. இவங்கதான் காஞ்சனா. நம்ம பக்கத்து செட்டியார் வீட்டுக்கு குடி வந்துருககாங்க. நான்தான் செட்டியார் அட்ரஸ் கொடுத்து வாடகை எல்லாமும் கூட பேசி முடிச்சேன்" -மரகதம் விலாவரிகளில் சென்றுகொண்டிருந்தாள். ஆனால் அவனிடமோ ஸ்தம்பிப்பு. காஞ்சனாவும் அப்படியே யாரோ ஒரு பார்க்கக்கூடாத மனிதனைப் பார்த்துவிட்டது போலத்தான் உணர்ந்தாள்.

எல்லாம் சில வினாடிகள்தான்.

"தேங்க்ஸ் மேடம். நான் வர்றேன். நிறைய வேலை இருக்கு..." என்றபடியே படுவேகமாக திரும்பி நடந்தாள்.

மரகதத்தை ஆச்சரியம் பிடித்துக் கொண்டது.

சந்துருவை மிக அருகில் சமீபித்தவள் உற்றுப் பார்த்தாள்.



"என்னக்கா..?"

"இவங்கள இதுக்கு முந்தியே தெரியுமா உனக்கு?"

"அது- அது-"

"சொல்லுப்பா. ஆமா... ஏன் உன்னை பார்த்துட்டு ஏதோ பார்க்கக் கூடாதவங்கள பார்த்த மாதிரி ஓடுறாங்க."

"அது-அது-"

"சம்திங் ராங். நீயும் ரொம்ப டென்ஷனா வேற ஆயிட்டே. ஒருவேளை இவங்கதான் அந்த-" மரகதம் ஒரு ரகசியத்தைக் கேட்பது போன்ற பாவனையில் கேட்க, சந்துரு என்கிற அந்த மனிதனின் விழிகளில் இருந்து உடனடியாக உருத்திரண்ட கண்ணீர்த் துளிகளில் இரண்டு சொட்டுகள் கன்னக்கதுப்பில் உருண்டு ஓடின.

"சந்துருஊஊ...!" மரகதத்திடம் அதிர்ச்சி ஒரு இழுவையாகி வெளிப்பட்டது.

"அக்கா... தப்பு பண்ணிட்டேன்க்கா..." என்றபடியே அவரும் அங்கிருந்து விலகி வேகமாக மாடிக்கு செல்லத் தொடங்கினார்.

மரகதம் பதிலுக்கு சொத்தென்று பக்கத்து சோபாவில் விழுந்தாள்!

## 4 காதல்! இது ஒரு ரகசிய அணுகுண்டு.

மதுரை டவுன்ஹாலில் ஊர்ந்து கொண்டிருந்தது கார். உள்ளே கனிஷ்கர்!

டிரைவர் அவளுக்கு மதுரை நகரை அறிமுகப் படுத்திக்கொண்டே காரை செலுத்திக்

கொண்டிருந்தான். "பாப்பா- இதான் டவுன்ஹால் ரோடு. மெட்ராஸ்க்கு ஒரு ரங்கநாதன் தெரு, சேலத்துக்கு ஒரு தேர்முட்டி, கோயமுத்தூருக்கு ஒரு ஒப்பணக்கார வீதி மாதிரி மதுரைக்கு டவுன்ஹால் ரோடு. எப்பவும் ஜேஜேனு இருக்கும். மெட்ராஸ்லாம் கூட ஒன்பது மணியானா தூங்க ஆரம்பிச்சிடும். இங்க அப்பதான் சுறுசுறுப்பு ஜாஸ்தியாகும்..."

"இப்படித்தான் · மீனாட்சியம்மன் கோயிலுக்குப் போகணுமா?"

"நேரா ஒரே ரோடுதான்.. நடந்தா அஞ்சு நிமிஷம் கூட ஆகாது. ஆனா ஆட்டோ, சைக்கிள் ரிக்ஷாக்காரங்ககிட்ட சிக்கினா அவ்வளவுதான். சட்டுன்னு நேரா போகாம நாலு ஆவணி வீதியையும் சுத்தி இழுத்துக்கிட்டு போய் நிறுத்துவாங்க."

"சீட்டிங்கா..?"

"கேட்டா வயத்து பொழப்புன்னு சொல்வாங்க. ரொம்பப் பேசினா 'கோடிக்கணக்குல அமுக்கறவங்கள உட்ருவீங்க. அஞ்சு பத்துக்கு உலக நியாயம் பேசுவீங்க"ன்னு வாயடிப்பாங்க."

"அதுலையும் கொஞ்சம் உண்மை இருக்கில்ல." கனிஷ்கா ஆமோதிக்க எதிரில மேற்கு கோபுரம் தெரிய ஆரம்பித்தது.

"கோயில் வந்துடுச்சு வாங்க" டிரைவர் சொல்ல ஒரு கோயில் மாடு முன்னாலே எனக்கென்ன என்று நிதானமாக கடந்து போனது. பிரேக் போட்டு பிறகுதான் எடுக்க முடிந்தது.

"அந்த மாட்டுக்கு வந்த வாழ்க்கையப் பாருங்க."



"சேலம் என்ன வாழுது- அங்கேயும் இதே டிராஃபிக்- இதே திணறல்தான்..."

"ஆமா.. ஏன் பாப்பா நீங்க இன்னும் கார் வாங்காம இருக்கீங்க."

"வாங்கணும். நான் வேலைக்கு போய்..."

"அப்பா..."

"அப்பாவா... அவர்தான் மண்டையைப் போட்டு பல வருஷமாச்சுன்னு நேத்தே சொன்னேனே?"

"அ- ஆமாமா.. வேற ஆம்பளைத் துணை இல்லையா?"

"ஏன்.. நான் யாராம்?" கனிஷ்கா திருப்பிக் கேட்ட விதத்தில் நல்ல நெஞ்சுரம். டிரைவரும் சிரித்தான். அதற்குள் கோபுரம் வந்துவிட காரை வளைத்து பார்க் செய்தான். காரில் இருந்து கனிஷ்கா இறங்கும்போதே "ஹாய்.." என்று குரல் ராம்தான்! பாய்ந்து வந்தவன் போலிருந்தான்.

"ரொம்பதான் தம்பி வேகம்" என்று டிரைவரிடமும் கமெண்ட்.

பதிலுக்கு சிரித்தான்.

"என்னப்பா... எப்படி கண்டுபிடிச்சே?" கனிஷ்கா செல்லமாக ஆரம்பித்தாள்.

"அதான் டிரைவர்கிட்ட தெளிவா சொல்லி அனுப்பியிருந்தேனே..." அவன் கோயிலுக்குள் நடந்தபடி குதூகலமாக தொடங்கினான்.

"ராம்.. நான் இப்ப வந்தத பெரிய விஷயம் தெரியுமா?"

"என்ன... உன் அம்மா எங்கேயும் போகக்கூடான்னு தடுத்தாங்களா?"

"அது யூஷுவல். முதல்ல அவங்களும் வரேன்னு சொல்லிட்டாங்க."

"அய்யய்யோ."

"கடைசில என்னன்னு தெரியில."நான் வரல; ஒரே தலைவலி. நீ போய்ட்டு வா. நிதானமா வா. ஒண்ணும் அவசரமில்ல"ன்னுல்லாம் சொன்னாங்கன்னா பார்த்துக்கையேன்."

"ஆச்சரியமா இருக்கே... அப்படி ஓரமா உக்காருவோமா."

"இவ்வளவு ஓபன் ப்ளேஸ்லையா?"

"இங்கதான் உக்காந்து பேச முடியும். வேற இடம் கிடையாது. ஆமா யாராவது பார்த்துடுவாங்கன்னு பயப்படுறியா?"

"புது ஊர்தான். இருந்தாலும் கொஞ்சம் பக்கு பக்குன்னுதான் இருக்கு!"

"எதுக்கு பக்கு பக்கு. உங்கம்மா என்ன நம்ம காதலுக்கு சம்மதிக்க மாட்டாங்கன்னு நினைக்கறியா?"

"எத்தனை தடவை இந்தக் கேள்வியையே கேட்பே நீ."

"அம்மாகிட்ட காதல்ங்கற வார்த்தையைக்கூட யாரும் ஓபன் பண்ணக்கூடாது. அப்படியே நொறுங்கிப் போயிடுவாங்க, தெரியுமா?"

அவள் கேட்க அவன் பகமடத்தை ஒட்டிய ஒரு மரத்தடி திட்டின் கீழ் போய் ஒரு ஊது ஊதிவிட்டு அமர்ந்தான். அவளும் அருகில் அமர்ந்தாள். அப்படியே அவனை ஊடுருவினாள்.

"எதுக்கு அப்படிப் பாக்கறே?"

"இன்னிக்கு ஐயா வேலைக்கு மட்டம்



போட்டுட்டீங்களோ?"

"ஆமாம். நீ ஊரைவிட்டுப் போகும்போது எனக்கு மட்டும் எப்படி வேலை ஓடும்."

"அதுக்காக இப்படியே பைக்லையே ஃபாலோ பண்ணிகிட்டு வருவே."

"எல்லாம் ஒரு தில்தான். என் கனிக்காக நான் உருண்டுகிட்டே கூட வருவேன்."

"கொஞ்சம் விட்டா வழிய ஆரம்பிச்சிடுவியே."

"சரி கனி... கண்டத பேசி மூட் அவுட் பண்ணாதே. விஷயத்துக்கு வா."

"நீ விஷயத்துக்கு வான்னா அர்த்தமே வேறையாச்சே."

"அது யாருமில்லாத இடத்துல. இந்த மாதிரி கோயில்ல சந்திக்கும்போது ஐயா சுத்த சைவம்."

"எங்கேயும் எப்பவும் சைவமா இருக்கணும். அதுதான் நல்ல ஆம்பளைக்கு அழகு"

"ஃபர்ஸ்ட் நைட்டும்போது கூடவா?"

"ச்சீ..."

"பரவாயில்லையே! நல்லாவே வெட்கப்படுறீயே.."

"போதும். இப்படியெல்லாம் பேசிட்டு நீ போய்டுவே. நைட் நான்தான் கஷ்டப்படுவேன்."

"அப்படி வா வழிக்கு... என்னமோ நீங்கல்லாம் மௌண்டைன் ராக் மாதிரியும் நாங்கதான் அப்படியே தளும்பி வழியற மாதிரியும்ல நாட்டுல ஒரு பேச்சு இருக்கு"

"ராம்... ஊரைப்பத்தி எல்லாம் எதுக்கு நாம பேசிகிட்டு. உன்கிட்ட நான் ஷையா பிஹேவ்

பண்றதுங்கறது மீனிங் லெஸ். நமக்குள்ள என்னடா ஒளிவு மறைவு? அது ஹிப்பாகிரஸி! என்னோட பலம் பலவீனம் எல்லாம் உனக்குத் தெரியணும். அது உனக்கும் பொருந்தணும்."

"நான் எதை உன்கிட்ட மறைச்சிருக்கேன் சொல்லு. விக்டோரியா தியேட்டர்ல ஸ்கூல் படிக்கும்போது மலையாளப் படத்து பிட்டுங்க பார்த்ததுல இருந்து சரோஜா தேவி புக் படிக்கது வரை எல்லாத்தையும்தான் உன்கிட்ட ஒத்துக்கிட்டேன்..."

"ரொம்ப கெட்ட பையன்டா நீ..."

"மனம் விட்டு உண்மைகளைச் சொன்னதுக்கு நீ கொடுக்கற சர்டிபிகேட்டா கனி இது?"

"கெட்டப் பையன்னா ரொம்ப நல்ல கெட்டப் பையன்னு அர்த்தம்."

"ஆமாம்... நல்லா சமாளிக்கப் பாரு. ஒண்ணு மட்டும் நல்லா புரிஞ்சுக்கிட்டேன். உன்னை மாதிரி பெண்களுக்கு உண்மையை பிடிக்காது. பொய் சொல்லணும். நடிக்கணும். அப்ப ரொம்ப நல்லவன்னு சொல்வீங்க" -ராம் ரொம்பத்தான் சிவந்து போனான். படபடவென்று பொரிந்து வேறு தள்ளினான்.. எவ்வளவு தூரம் தன் கருத்தை சீரியஸாக நினைத்தால் அவன் அப்படி நடந்து கொள்வான் என்று எண்ணிப் பார்த்தாள் கனிஷ்கா. தொடர்ந்து அவனை சீண்டிக்கொண்டே இருக்கலாம் போலக்கூடத் தோன்றியது. அதே வேளையில் அவர்களைக் குத்துவது போல பார்த்துக்கொண்டே ஒருவன் சென்றான். அவனுக்கு காதலிக்க யாரும் கிடைத்திருக்க வாய்ப்பில்லாத மாதிரி இருந்தது.



இல்லாவிட்டால் அப்படி ஒரு பொறாமை கண்களில் வழியாது.

"ராம்... விட்டா அவன் என்னை அப்படியே விழுங்கிவிடுவான் போல இருக்குப்பா..."

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்ற?"

"இன்னும் கோவம் தீரலையாக்கும். சும்மா சீண்டினேன். ரொம்பத்தான் மலை ஏறுறியே."

"இல்ல கனி... நீ இன்னும் சந்தேகப்பட்டறே. நான் உன்னைக் கல்யாணம் செய்துக்குவேனோ மாட்டேனோன்னு உனக்கு அடி மனசுல ஒரு டவுட் இருக்கு."

"அடப்பாவி... என்ன இது? எதுக்கு இப்படி எல்லாம் உளறுறே?"

"உளறலை. அதான் உண்மை!"

"வாயக் கழுவு. அப்பப்ப இப்படி ஒரு கேள்வியக் கேட்டு அதுக்கு நான் உன்னை சமாதானப்படுத்தறதே எனக்கு வழக்கமா போச்சு."

"எங்க சமாதானப் படுத்தறே... சீண்டிக்கிட்டேல்ல இருக்கே. கார்ல வரும்போது திரும்பிப் பார்த்தியா நீ."

"ஓ... அந்தக் கோபமா? நீ கிறுக்கு பிடிச்சு ஃபாலோ பண்ணுவே. நான் அதைப் பார்க்கணுமாக்கும்."

"அடிப்பாவி... உனக்காக 250 கிலோமீட்டர் ஓரம் கட்டாமே வந்துருக்கேன். கைகால் வலி எப்படி இருக்கு தெரியுமா?"

ஏன் வரணும்னேன்... நான் உன்னோட ஜேம்ஸ்பாண்ட் தனத்தை எல்லாம் என்கரேஜ்

பண்ண மாட்டேன்."

"அதான் ரயில்வே லைன்ல நின்னப்போ 'ஐ லவ் யூ'ன்னு கத்தினியாக்கும்."

அவனது வேகமாக மடக்கலில் அவளும் கொஞ்சம் மாட்டிக் கொண்டது போலத் திணறித்தான் போனாள். அப்பொழுது அவர்கள் பார்க்கும்படியாக கார் டிரைவர் அவர்களைக் கடந்து சென்றான். 'நேரமாகிறது... நானும் ஊருக்குக் கிளம்ப வேண்டும்' என்று சொல்லாமல் சொல்லுகிற மாதிரிதான் இருந்தது அவர்களும் புரிந்து கொண்டனர்.

"கனி- இந்த டிரைவர் ரொம்ப நல்ல மனுஷன் இல்ல?"

"ஆமாண்டா. நாம காதலிக்கறது தெரிஞ்சு ஆம்பளைங்களை நம்பாதேன்னு ஏதாவது அட்வைஸ் பண்ணுவார்னு பயந்தேன். ஆனா நேர் எதிரா இருந்து இன்னிக்கு நான் உன்ன சந்திக்கவே காரணமா இருந்துட்டாரு."

"நல்ல டைமிங்சென்ஸ் உள்ள மனுஷன்."

"அப்ப இப்ப நம்ம எதுக்க எதுக்கு போனார்னு சொல்லு பார்ப்போம்."

"டைமாச்சு, கிளம்புங்கன்னு சொல்றாரு."

"அட உனக்குக்கூட எல்லாம் புரியுதே.." கனிஷ்கா திரும்பவும் அவனை வார அவனும் முகத்தை உம்மென்று வைத்துக் கொண்டான்.

"பார்த்தியா.. உங்கிட்ட விளையாடக் கூடாதே..." செல்லமாக அவன் கன்னத்தில் தட்டியபடியே எழுந்து நின்றாள்.

"அப்ப கிளம்பிட்டியா?"

"பின்ன- இங்கேயே குடும்பம் நடத்தலாம்னு



பாக்கறியா?"

"ஒகே. அடுத்து எப்ப எங்க சந்திக்கலாம்?"

"உன் செல்லுக்கு நான் கூப்பிட்டு சொல்றேன். அம்மா நாளைக்கே காலேஜுக்குப் போய்டுவாங்க. என்னையும் சி.ஏ. பண்ணச் சொல்றாங்க. அதுக்காக ஒரு ஆடிட்டரைப் பார்த்து அவர்கிட்ட பிராக்டிகல் டிரெயினிங் எடுக்கணுமாம் நான்."

"சி.ஏ.வா..? அவனவன் முப்பது நாப்பது தடவை எழுதியே பாஸ் பண்ணலை. உனக்குத் தேவையா?"

"ஒரே அட்டெம்ட்ல மேல ஏறாட்டி கேளு."

"அப்படியா..? அதையும் நான் பாக்கறேன்."

"பாரு.. பாரு..." கேலியும் கிண்டலுமாக நடந்தனர். டிரைவர் எதிரில் திரும்ப வந்தான்.

"போலாம் டிரைவர்.."

"ஒரு நிமிஷம்மா."

"உள்ள போய் மீனாட்சிய கும்பிடலையா?"

"கும்புடணுமா என்ன?"

"என்னம்மா... இவ்வளவு தூரம் வந்து அம்மாவை பார்க்கப் போலேன்னா எப்படி.."

"அம்மாவா?"

"மீனாட்சி தாயைத்தான் நான் அம்மான்னேன்."

"ஒ... பரவால்ல. நான் இன்னொரு நாள் வந்துக்கறேன். நீங்க வேற சேலம் வரை திரும்பிப் போகணும்."

"இல்லம்மா.. இந்தக் கோயிலுக்குள்ள வந்துட்டு அம்மாவைப் பார்க்காமப் போறது நல்லது இல்லம்மா."

"நல்லது இல்லன்னா.. ஐ ஹேவ் நோ மூட். அந்த அம்மா என்னக் கும்பிடலேன்னா கண்ணையா குத்திடும்?" கனிஷ்காவிடம் இளமைக்கே உண்டான ஆவேசம் கொப்பளித்தது. டிரைவர் அதைப் பார்த்து வருத்தப்படுகிற மாதிரி தெரிந்தது.

"டிரைவரண்ணே.. வருத்தப்படாதீங்க.நான் இவளைக் கூட்டிட்டு வரேன். நீங்க நல்ல எண்ணத்துல சொல்றதுக்காவது உள்ள போய் கும்பிட்டுட்டுதான் போகணும். கனி... ஆர்கியூ பண்ணாம என் கூட வா. சன்னதியில உனக்கு நான் மீனாட்சி குங்குமம் வெச்சு விட்றேன்."

"என்ன.. செண்டிமெண்ட்டா?"

"வெச்சுகோயேன். 'உன்னை நம்பி நெத்தியில.. பொட்டு வெச்சேன் மத்தியில... மச்சான் பொட்டு வெச்சேன் மத்தியில... நெத்தியிலன்னு பாட்டு கேட்டதில்லையா நீ. கமான்.."

அவள் கையைப் பிடித்து இழுத்தான். அப்படியே வேகமாக நடந்தான்.

"வழிபாடுங்கறது ஒரு கம்பல்ஷனர் இருக்கக்கூடாது ராம்.."

"ஏன் கம்பல்ஷனா நினைக்கறே? கடமையா நினை.."

"கடமையாவா.. வாட் நான்சென்ஸ் யூ ஆர் டாக்கிங்?"

"எதுக்கு இப்படி எய்த்திஸ்ட் மாதிரி கத்தறே?"



"அஃப்கோர்ஸ். இதுல என்ன தப்பு?"

"கனி.. ஏன் ஒண்ணும் இல்லாத விஷயத்தை பெரிசுபடுத்தறே? முதல் தடவையா மதுரை வந்துருக்கே. மீனாட்சி தரிசனம் உனக்கு நல்லதுன்னுதானே அவர் சொல்றாரு."

"அப்ப தரிசனம் பண்ணலேன்னா கெட்டதா?"

"இதுக்கு மேல நீ ஏதாவது பேசினே இழுத்து வெச்சு அறைவேன். உன் அம்மாதான் போய்ட்டு மெல்ல வான்னு சொல்லியிருக்காங்கல்ல. எதுக்கு இப்படிப் பறக்கறே? அண்ணே நீங்க கார்கிட்ட வெயிட் பண்ணுங்க. தரிசனம் பண்ணிட்டு வந்துட்றோம்." அவளை மிரட்டி அடக்கியவனாக அப்படியே தோளோடு தோள் உரச நடந்தான். ஆடி வீதியில் அவனைப்போலவே பலர். சிலர் ரசித்தனர். சிலர் சிரித்தனர். எதிரில் ஒரு குச்சி ஜோசியக்காரி..! ஒரு கையில் துணிப்பை, ஒரு கையில் குச்சியுடன்!

இருவரையும் பார்க்கவும் "ஜோசியம் பார்க்கறீங்களா?" என்றாள் தன் நெற்றிலை குதப்பிய வாயால்.

ராமுக்கு சபலம் தட்டியது. தேங்கி நின்றான்.

"என்ன நின்னுட்டே... நட!" இழுத்தாள் கனிஷ்கா.

"இந்தம்மா சொல்ற ஜோசியத்த கேப்போமா?"

"ஜோசியமா.."

"ஆமாம் தாயி.. சக்கம்மா பேரால நடந்தது, நடக்கப் போறது, முடிஞ்சது, முடியாததுன்னு அம்புட்டையும் புட்டுப்புட்டு வைச்சுப்புடுவேன்.

ஒரு காபி தண்ணி குடிக்கற காசுதான். அஞ்சே ரூபா!"

"ராம்.. பேசாம வா. ஐ டோன்ட் பிலீவ் தீஸ் திங்க்ஸ்."

"அட.... என்னதான் சொல்றான்னு கேப்போமே.."

"ஏன் இப்படி வடிகட்டின இடியட் மாதிரி பிஹேவ் பண்றே? நம்ம ஃபார்ச்சூனை இவளாலே சொல்ல முடியும்னா இவ ஏன் இப்படி அஞ்சுக்கும் பத்துக்கும் அலையணும்? முட்டாள்தனமா இல்லை?" வெடித்தாள் கனிஷ்கா.

"அது சரி.. லட்சம் பேரை ஏத்தி உட்ற ஏணி அப்படியேதான் தாயி இருக்கும். அதால ஏற முடியாது. அப்படித்தான் நாங்களும்" - ஜோசியக்காரி பதிலில் நல்ல லாஜிக். கனிஷ்கா திணறிவிட்டாள்.

"அப்படிப் போடுங்க. வாங்க அப்படி ஓரமா." அவளோடு மதில் சுவர் ஓரமாக ஒதுங்கிச் சென்றான். அப்படியே அவள் முன் ஆவலாக கையையும் நீட்டினான். அவள் உஷாராகக் காசு என்று முதலிலேயே கேட்டு வாங்கிக் கொண்டாள். பிறகு நெற்றிப் பொட்டில் சிறிதுநேரம் அந்த கைக்குச்சியின் நுனியை வைத்திருந்துவிட்டு அப்படியே அவன் உள்ளங்கையில் பதித்தாள்.

பின்பு அவளது சிவந்த நாக்கு பாட்டாக பாட ஆரம்பித்தது. கனிஷ்காவும் மெல்ல ஆர்வமாகி கிட்டே வந்து கவனிக்கத் தொடங்கினாள்.

'ஆங்..!



சக்கமா வாரோனும்
சடுதியில வாரோனும்
சத்திய வாக்கு சொல்ல, என்
புத்தியில வாரோனும்.
பழனிமலை முருகனைத்தான்
பணிவுடனே நினைச்சேனே! அந்த
மருதமலை வேலனைத்தான்
வேண்டிக்கிட்டு நினைச்சேனே..!"
வள்ளிக்கண்ணு புருஷனைத்தான்
சொல்லிக்கிட்டு நினைச்சேன்'

காளை உனக்கு இப்ப காதலிருக்கு மனசுக் குள்ள.. கடுநெருப்பா அதுவும்தான் கணகணன்னு எரிஞ்சுக்கிட்டுருக்கு! ஆசை மனசுக்குள்ள அடங் கிக் கிடக்கற மகராசி அன்னியமில்ல அசலுமில்ல.."

"அப்படின்னா?"

"அவ உனக்கு உறவுதான். உன் ஆசை இனி துறவுதான்."

புரியலை."

"நீ ஆசை வெச்சிருக்கிற பொண்ணு உனக்கு உறவுன்னு சொல்றா சக்கம்மா."

"சொந்தம்னு சொல்ல வர்றியா?"

"எப்படிச் சொன்னாலும் அர்த்தம் ஒண்ணுதான். அழுத்தமா சொல்லுதேன். ஆசை வைக்காதே. ஆட்டம் கண்டு நிக்காதே."

"அம்மா தாயே.. கொஞ்சம் புரியிற மாதிரி சொல்லேன்."

"இதுக்கு மேல சொன்னாக்கா உன் நெஞ்சு தாங்காது. கிறுக்கு பிடிக்காம உருக்காவே நீ இருக்க இந்தக் கோயில் ஆத்தா மீனாட்சிதான் துணை செய்யணும்."

"கிறுக்கு, உருக்கு.... அப்பறும் உறவு, துறவுன்னு போட்டு குழப்பறியேம்மா. பளிச்சுன்னு சொல். இதோ இவதான் என் வருங்கால மனைவி". ராம் கனிஷ்காவை நோக்கித் கையைக் காட்டினான்.

அவளோ ஒரு கேலிச் சிரிப்பு சிரித்தவளாக "நீ நினைச்சா ஆச்சா.. ஒருத்தன் பொஞ்சாதியை இன்னொருத்தன் கட்ட முடியாது... நான் வாரேன்!"

அந்த ஜோசியக்காரி வெடாசான பதிலோடு நழுவவும் பார்த்தாள்.

"நில்லு... இன்னும்கூட ஒரு அஞ்சுரூபா தர்ரேன். எங்க காதல் சக்ஸஸ் ஆகும்தானே? அதுக்கு மட்டும் பதில் சொல்லிட்டுப்போ.." ராம் ஐந்து ரூபாயை எடுத்து நீட்டினான். அவள் அதைப் பார்த்து சிரித்தவளாக "உள்ளார போய் உண்டியல்ல போட்டுட்டு நல்லவழி காட்டு தாயின்னு கும்பிட்டுட்டுப்போ-நான் வரேன். இனி யார்கிட்டேயும் இந்தக் கையைக் காட்டாதே" என்றபடியே வேகமாக விலகத் தொடங்கினாள் அவள். ராம் முகம் சூம்பிவிட்டது.

"என்ன... இதுக்குத்தான் நான் வேண்டாம்னேன். போட்டு குழப்பிட்டாளா?"

"குழப்பறதா... கலக்குகலக்குன்னு கலக்கிட்டா."

"இந்த மாதிரி இல்லிட்ரேட் பீப்பிள்ஸ்லாம் கலக்கற லெவல்லையா வீக்கா மனசை வெச்சுக்கறது."

"இல்ல கனி... இவங்கள்ல சிலர் அப்பயே மனசுல இருக்கறத புட்டுப் புட்டு வைப்பாங்க தெரியுமா?"



"புட்டும் வைக்கமாட்டாங்க. பிட்டும் வைக்க மாட்டாங்க. நட... உங்கம்மாவைப் பாத்துட்டுக் கிளம்புவோம். எனக்குத் தூக்கம் தூக்கமா வருது."

"உனக்குத் தூக்கம், எனக்கும் துக்கம்!"

"போதும் உன் கவிதைப் பேச்சு. நட..."

இருவரும் நடந்தனர். சன்னதி முன் சென்றபோது அபிஷேகத்திற்காக திரை போட்டப்பட்டிருந்தது. தரிசனத்திற்கு அரைமணி நேரத்திற்கு மேல் ஆகும் என்றார்கள்.

"சாரி ராம். நான் கிளம்பறேன். நீ என்ன செய்யறதா உத்தேசம்?"

"கொஞ்சம் பொறு கனி. இருந்து தரிசனம் பண்ணிட்டுப் போவோம்."

"அதுசரி.. அரைமணி நேரம் காத்திருக்க எனக்குப் பொறுமை இல்ல. நீ வேணா இருந்து கும்பிட்டுட்டு நல்ல நேரத்துல ஊருக்குக் கிளம்பு. பை த பை.... கேர்ஃபுல்லா ஜாக்ரதையா போ. காலைல உனக்கு நான் போன் பண்றேன்."

"கனி..."

"வழியாதே.. உனக்கோ எனக்கோ எதுவும் ஆகாது. நம்ம காதலையும் நான் தோக்க விடமாட்டேன்."

"நெஜமா..?"

"போதும்டா-நான்தான் சொல்லிட்டேன்ல. இந்த ஜென்மத்துல எனக்குப் பிடிச்சிருக்கோ பிடிக்கலையோ நீதான் என் புருஷன். நான்தான் உன் மனைவி. போதுமா. பை?" -கனிஷ்காவின் துள்ளலான பேச்சில் தெறித்த உறுதி அவனுக்குள் சக்கரையாகக் கரைய அப்படியே ஒரு ஓரமாய் போய் உட்கார ஆரம்பித்தான்!

## 5 காதல்! இதயத்தின் மோசமான நண்பன்

வீட்டுக்குள் நழைந்த கனிஷ்காவுகு அதிர்ச்சி காத்திருந்தது. பெட்ரூமில் காஞ்சனா குளிர்ஜ"ரம் வந்தவள் போல நடுங்கியபடி படுத்திருந்தாள்.

"அம்மா..." ஓடிச் சென்றாள்.

"கனி..."

"என்னம்மா. என்ன உடம்புக்கு?"

"ஓ- ஓ- ஒண்ணுமில்ல. லேசான காய்ச்சல்!"

"லேசான காய்ச்சலா... உடம்பு இந்த நடுங்கு நடுங்குது."

"ஒண்ணும் இல்ல. நீ... நீ கோயிலுக்குப் போய்ட்டு வந்துட்டியா?"

"அதை விடு. நீ இப்ப என்கூட டாக்டரைப் பார்க்க வர்றே. நல்லவேளை கார்க்காரரை இருக்கச் சொன்னோம்."

"இல்ல கனி... அவருக்குக் கொடுக்க வேண்டியதக் கொடுத்து போகச் சொல்லிடு."

"எல்லாம் டாக்டரைப் பார்த்துட்டு அப்புறம் அனுப்பிக்கலாம். நீ முதல்ல கிளம்பு.

"இல்ல... நான் வரமாட்டேன்... வெளிய மட்டும் வரவேமாட்டேன்..."

"வெளிய என்ன சிங்கம் புலியா இருக்கு - இப்படி பயப்பட...?"

"இல்ல நீ போ... என்னைக் கொஞ்சம் நிம்மதியா இருக்கவிடு."

"ஏம்மா இப்படி எல்லாம் பேசறே...?"



"தயவுசெய்து போறீயா?"

காஞ்சனா உச்சபட்சமாய்க் கத்தினாள். இதற்குமுன் இப்படி எல்லாம் அவள் கத்தியதே இல்லை.

அதிர்ந்து பேசவே தெரியாதவள்தான் காஞ்சனா. அவளா இன்று இப்படியெல்லாம் நடந்து கொள்கிறாள்?

கனிஷ்காவை ஆச்சரியம் பிடுங்கித் தின்றது.

அந்த அறையைவிட்டு வெளியில் வந்தாள்.

ஹாலில் விளக்கைக்கூட காஞ்சனா போட்டிருக்கவில்லை.

எந்த ஸ்விட்ச் எங்கே இருக்கிறது என்றே தெரியாத நிலையில் தடவித் தடவி எல்லா ஸ்விட்சுகளையும் போட்டாள். வீட்டுக்குப் பக்கவாட்டில், வெளியில், வராண்டாவில் என்று எல்லா இடங்களிலும் விளக்குகள் எரியத் தொடங்கின. ஹாலிலும் விளக்கு எரிந்தது. பின் மற்றதை அணைத்துவிட்டு ஹாலில் ஒரு மூலையில் போட்டிருந்த ஒற்றை சீட் சோபாவில் போய் விழுந்தாள்.

சில நாற்காலிகளும், சில சோபாக்களும் சிலர் வரையில் மிக ராசியாகிவிடும். உட்காரும் உடம்பு வாகுக்கு ஏற்ற மாதிரி சுகமாக அவை அமைந்துவிடும். அதில் உட்கார்ந்து பழகிவிட்டால் பிறகு வேறு எதிலும் அமரப் பிடிக்காது. கனிஷ்கா வரையிலும் கூட அந்த சோபா அப்படித்தான். எவ்வளவு களைப்பு இருந்தாலும் அதில் அமர்ந்தால் அது பறந்துவிட்ட மாதிரி ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டுவிடும்.

கனிஷ்காவுக்கு இப்பொழுதும் அப்படி ஒரு புத்துணர்ச்சி தேவைப்பட்டது.

ஒரு பக்கம் அம்மாவின் அணுகுமுறை மாற்றம். மறுபக்கம் கோயிலில் அந்த ஜோசியக்காரி மூலம் காதில் விழுந்த விஷயங்கள்.

சாதாரணமாக கவலைப்பட்டுக் கொள்ளவே தெரியாத கனிஷ்காவிற்கே மனது ஈரம் ஊறிப் பருத்த கடல் பஞ்சுபோல் பாரமாகிவிட்டது.

முதல்நாளே அந்த வீட்டு ராசி வேலை காட்டுவதாகக் கூட ஒரு எண்ணம்.

'சேச்சே... வீடு என்ன செய்யும் - எல்லாம் கோழை மனசு கண்டுபிடித்துச் சொல்லும் சால்ஜாப்!' தனக்குத் தானே சமாதானமும் சொல்லிக் கொண்டாள்.

அதேசமயம் காஞ்சனா தன் அறைக்கதவை சாத்திக் தாழிடடுக் கொள்ளும் சப்தம் கேட்டது.

அது கனிஷ்காவை மேலும் சங்கடப்படுத்தியது.

"அம்மா... இங்க நான் மட்டும்தான் இருக்கேன். எதக்கு இப்படித் தாழ் போட்டுக்கறே" என்றாள் மிகவே கூமாக. ஆனால் உள்ளிருந்துதான் பதிலே இல்லை.

அதனால் எரிச்சல் சற்றக் கூடிப்போனது.

'அம்மா இப்படி எல்லாம் செய்பவளே அல்ல! இன்று இவளுக்கு என்ன வந்தது...?' கனிஷ்காவை மெல்ல ஒருவித அச்சம் ஆக்ரமிக்க ஆரம்பித்தது. கதைகளில் படித்த டிவியல் பார்த்த சில சம்பவங்களும் காட்சிகளும் மன அரங்கில் குறுக்கும் நெடுக்கும் ஓட ஆரம்பித்தன.



'டிப்ரெஸ் ஆன பல பெண்கள் இப்படிக் கதவைத் தாழிட்டுக் கொண்டால் அடுத்து அவர்கள் விபரீதமாக ஏதோ செய்யப் போகிறார்கள் என்று பொருள்.

அம்மாவும் அப்படி ஏதாவது?'

பயம் அவளைத் தூண்டிவிட்டு அந்த சோபாவை விட்டு எழுப்பியது.

தாழ் போட்ட கதவருகே சென்று நின்றாள்.

சாவித்துவாரம் வழியாக பார்ப்பதற்கு என்று குனிந்தாள்.

மனது கூசியது.

இப்படி யாரர்வது அவளது அறையை நோட்டம் போட்டால் கண்ணைப் பிடுங்க வேண்டும் என்கிற அளவுக்குக் கோபம் வரும். 'இண்டீசன்ஸி' என்று மனது கிடந்து அரற்றும். இன்று அதே இண்டீசன்ஸிற்கு கால நேரம் நிர்ப்பந்திப்பதை நினைத்துப் பார்த்து சில வினாடிகள் தயங்கியவள் தைரியத்தை வரவழைத்துக கொண்டு குனிந்தாள். சாவித்துவாரம் வழியாகப் பார்த்தாள்.

அடுத்த நொடி அவள் கண்ணில் தீப்பிடித்தார் போல ஒரு அவஸ்தை.

உள்ளே காஞ்சனா கட்டிலுக்கு மேல் தூக்குக் கயிற்றில் தொங்கத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

"அம்மா..." - தொண்டை அறுந்துபோகும் அளவு ஒரு அலறல் கனிஷ்காவிடம்.

சப்தம் வெளியே வெகுதூரம் வரை கேட்டது.

பக்கத்து வீட்டில் அந்தப் பெண்மணி

மரகதம் காதிலும் விழுந்தது-

கனிஷ்காவின் கைகள் கதவைத் தட்
அதைப் பெயர்த்துப் போடும் ஆவேசத்துக்
மாறியிருந்தன.

பயனில்லை.

வெளியே ஓடிவந்தாள். மரகதம் முகம்தா
முதலில் நினைவுக்கு வந்தது.

"ஆன்ட்டி..." என்று அலறிக்கொண்
ஓடும்போது அவளே எதிரில் படுவேகமா
வந்தாள். பின்னாலேயே அந்த சந்துரு என்கி
சந்திரசேகரன்!

"என்னம்மா..?"

"ஆன்ட்டி சீக்கிரம் வாங்க. அம்மா சூய்சைட்
அட்டெம்ப்ட் பண்ணிகிட்டிருக்காங்க..."

"மைகாட்..."-மரகதம் வாய்விட, சந்துரு
என்கிற சந்திரசேகர் ஒரு புயல் காற்றைப்போல
உள்ளே நுழைந்தார்.

அப்படி நுழையும்போதே, "காஞ்ச்- தப்புப்
பண்ணாதே. ஒருதடவை பண்ணினது போதும்."
என்று அவரிடம் இருந்து அவரையும் மீறி
வார்த்தைகள் உதிர்ந்தன.

கனிஷ்காவுக்கு திகைப்பு.

திகைப்பு கலையுமுன்பே சந்துருவின்
ஆவேசப் பாய்ச்சலும், உருக்குக் கைகளும்
அறைக்கதவைப் பிய்த்துத் தள்ளின.

உள்ளே ஓடியபோது காஞ்சனா கால்களை
உதைத்துக் கொண்டு தொங்கி விட்டிருந்தாள்.

தாவிப் பிடித்த சந்திரசேகர் அப்படியே
மேலே தூக்கினார்.



அது அவளது மேல் நோக்கிய
பயணத்துக்கும் தடை போட்டது. அதற்குள்
பின்தொடர்ந்து வந்த மரகதம் கட்டிலில் ஏறி
கழுத்தை இறுக்கிய கயிற்றைத் தளர்த்தினாள்.

உடம்பு அப்படியே சந்துருவின் மேல் ஒரு
வாழை மரமாட்டம் சரிந்து விழுந்தது. அப்படியே
சுமந்து வந்து கட்டிலில் கிடத்திவிட்டு
பதைபதைப்போடு அவளைப் பார்த்தார். ஆனால்
கனிஷ்கா பார்வை என்னவோ சந்துரு மேலேயே
இருந்தது.

காதில் 'தப்புப் பண்ணாதே- ஒருதடவை
பண்ணினது போதும்..' என்கிற அந்தக் குரல்!
'அப்படியானால் அம்மா இதற்குமுன் தப்பு
பண்ணியவளா? அது என்ன தப்பு?"

**6**

**காதல்! உணர்ச்சிகளில் இது
அமிர்தம். ஆனால் உண்ணாத
வரைதான் வாழ்வு!**

ஒரு புயல் காற்றில் தூக்கி எரியப்பட்டுப் பின்
மீண்டு எழுந்து வந்தவன் போல இருந்தான் ராம்.
பைக்கை ஸ்டாண்ட் போட்டு நிறுத்திவிட்டு
அப்படியே முறைத்துப் பார்த்தபடி நின்று
கொண்டிருந்தாள் ஒரு இளம்பெண்.

அவன் அவளை லட்சியமே செய்யவில்லை.

அவளைத் தாண்டும்போது அவள் கையை
நீட்டி மறித்தாள்.

"ஏய்- கையை எடு!"

"எங்க போய்ட்டு வர்றீங்க..?"

"உனக்கெல்லாம் பதில் சொல்லவேண்டிய
அவசியம் எனக்கில்லை."

"சொல்லாட்டி விடமாட்டேன். நேத்து காலைல போன நபர். உள்ளூர்லையும் எங்கேயும் இல்ல. பேங்க்குக்கு வேலைக்குக்கூடப் போகாம லீவு போட்டுட்டு அப்படி எங்கதான் போவீங்க..?"

"இதோ பார்.. உன் வேலை என்ன உண்டோ அதை மட்டும் பார். அநாவசியமா என்னைப் பத்தி கவலைப்படாத."

"நான் கவலைப்படாம வேற யார் படுவா?"

"இந்தக் கேள்விக்கு சரியான ஒரு கனிஷ்கா'ங்கற ஒரு பேரை நான் பல தடவை சொல்லிட்டதா ஞாபகம். இப்பவும் அதுதான் என் பதில். என் உசுரை வாங்கறத விட்டுட்டு வேற எவனாவது இளிச்வாயன் சிக்குவானான்னு பார்.."

அவனது பதிலில் அனல் அடித்தது.

அதன் எதிரொலியாக அவளது கண்ணிலும் கண்ணீரின் திரட்சி.

அவன் உள்ளே நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டான். அவள் அழுது கொண்டே நின்றாள். பக்கத்தில் சுவரில் அவன் தாயின் படம். அதில் அணிவிக்கப்பட்டிருந்த மாலையே அவள் இப்பொழுது உயிருடன் இல்லை என்பதைச் சொல்லாமல் சொல்லியது. அவள் அந்தப் படத்தைத்தான் பார்த்தாள். இடையில் ஒரு குரல் கேட்டது.

"என்ன மோகனா... அத்தை படத்தைப் பார்த்து அவகிட்ட உன் குறையை சொல்லிக்கிட்டிருக்கியா?" -திரும்பிய அந்தப் பெண் எதிரில் ஒரு வயதானவர். பதிலுக்கு அவள் "தாத்தா" என்றாள்.

"நா பார்த்துகிட்டுதான் இருந்தேன். நீயும் விடாம அவன் மேலமேல போய் விழுறே. ஆனா அவனுக்கோ உன்னைப் பிடிக்கலை. விட்டுத் தொலையேன்.."

தாத்தா குரலில் கொஞ்சம் காட்டம் தொனித்தது.

"அப்புறம் சொத்து கையைவிட்டுப் போயிடும். காலைவிட்டுப் போயிடும்னு என்னைப் போட்டுப் படுங்கி எடுக்கக்கூடாது" - அவளும் பதிலுக்குக் காட்டமாகக் கத்தினாள்.

"அது- அது-"

"எது...? உங்களுக்கு சொத்தும் போகக் கூடாது. நானும் நல்லா இருக்கக் கூடாது. அப்படித்தானே?"

"இதோ பார்... இப்படி பதட்டப்பட்டா ஆச்சா. நிதானமா யோசிப்போம்."

"ஒண்ணும் யோசிக்கத் தேவையில்லை. அத்தான் மனசுல கனிஷ்காவோ புனிஷ்காவோன்னு ஒருத்திதான் இருக்கா. காதலைப் பத்தி உனக்கெல்லாம் என்ன தெரியுமோ... எனக்கு நல்லா தெரியும்" என்றபடி ஓடிச் சென்றவள் வாசலில் போர்டிகோவில் நின்றுகொண்டிருந்த பைக்கிடம் நெருங்கி அதன் மைலேஜ் மீட்டரைப் பார்த்தாள்.

பிறகு வேகவேகமாக விரல்விட்டு எண்ணியவள் கண்கள் அகண்டன.

"சர்தான்... கிட்டத்தட்ட அறுநூறு கிலோமீட்டர் அண்ணாத்தே ஊரைச் சுத்தி அடிச்சுட்டு வந்துருக்காரு. அனேகமா மதுரைக்குத்தான் போயிருக்கணும். பேங்குக்கு லீவு சொல்லும்போதுகூட மதுரை வரை

போய்ட்டு வர்ற வேலை இருக்குன்னுதான் சொன்னாரு" என்கிற முணுமுணுப்போடு திரும்பியவள் சரேலென்று திரும்பி அந்த தாத்தா மனதரைப் பார்த்து-

"தாத்தா... உன் பெண் வயித்துப் பேரன் மதுரைக்கு இங்க இருந்து மோட்டார் பைக்லையே போய்ட்டு வந்துருக்காப்படி. அந்த கனிஷ்கா மதுரை போகப் போறான்னு கேள்விப்பட்டேன். அவளைப் பார்க்கத்தான் போயிருக்கணும். இதுக்கு மேலயும் உன் பேரன் மேல விழுந்து நான் புரண்டேன்னா என்னை சினிமால வர்ள க்ளப் டான்ஸ்காரிங்க மாதிரிதான் அத்தான் நினைப்பாரு. ஆளை விடு.

சொத்து போனா போகட்டும். இனியும் நான் அதுகிட்ட வழிய தயாரா இல்லை."

மோகனா பட்டென்று தட்டியபடி கைகூப்பினாள். அந்த வயதானவர் முகத்தில் மட்டும் தாராளமாக சலனங்கள்!

**மொட்டை மாடி!**

மல்லாந்து படுத்தால் வானம், நட்சத்திரம், வட்டமடிக்கும் பறவைகள், அவ்வப்போது விமானங்கள் என சகலமும் தெரியும்.

எங்கேயும் எப்போவும் மொட்டை மாடிக்கு ஒரு சிறப்பு உண்டு. எப்பேர்ப்பட்டவருக்கும் மொட்டை மாடிக்குப் போனால் இறுக்கம் தளர்ந்துவிடும். அது உயரத்தில் இருக்கிறோம் என்பதாலா இல்லை உளவியல் காரணமா என்பதெல்லாம் ஆராய வேண்டிய விஷயங்கள். கனிஷ்காவுக்கு கிட்டத்தட்ட அப்படித்தான் இருந்தது.



மதுரைக்கு வந்து மூன்று நாட்கள் ஓடிவிட்டன.

காஞ்சனாவை டாக்டரிடம் காண்பித்து ஒருவாறு தேற்றியாகிவிட்டது. அவளோ கண் விழித்தது முதல் தலையைக் குனிந்துகொண்டு அழுவதையே வேலையாக்கிக் கொண்டுவிட்டாள்.

ஏன் அழுகிறாள்- எதற்காக அழுகிறாள்?

காரணத்தை அவள் சொல்லாவிட்டால் என்ன..?

சொல்ல நான் இருக்கிறேன் என்கிற மாதிரி சந்துரு.

இடையில் ஒருமுறை காபி தம்ளரோடு வந்து விட்டுப் போனாள் மரகதம்.

"எதையும் மறைக்காதே- கனிஷ்கா ரொம்ப போல்டான பொண்ணு. நல்ல மெச்சூரிட்டியும் இருக்கு. எங்கள மாதிரி இல்ல. ஆகையால் எதை எப்டிப் புரிஞ்சுக்கணுமோ அப்படிப் புரிஞ்சுக்குவா..." என்று காபி தம்ளர்களை எடுத்துக் கொண்டு செல்ல வந்தபோது சொல்லிவிட்டு வேறு சென்றாள்.

எல்லாவற்றையும் அசை போட்டபடியே கனிஷ்கா.

ஆனாலும் சந்துருவிடம் எப்படித் தொடங்குவது என்கிற ஒரு தயக்கம்.

"நாம மாடிக்கு வந்து கிட்டத்தட்ட அரைமணி நேரம் ஆகுது. இப்படியே எவ்வளவு நேரம் மௌனமா இருக்கப் போறீங்க" - மெல்ல அவனைச் சீறத் தொடங்கினாள்.

"பேசணும்னு தான்மா நினைக்கறேன். ஆனா பேச்சு வரமாட்டேங்குது."

"அப்ப நான் போய்டட்டுமா? எனக்கு எதுவும் தெரிய வேண்டாம். ரகசியங்கள் ரகசியங்களாவே இருந்துட்டுப்போகட்டும்."

"அக்கா சொன்னது சரிதான்..."

"என்ன சொல்றீங்க?"

"உன்னை ரொம்ப போல்டான பொண்ணுன்னு சொன்னதைச் சொல்றேன்."

"இப்ப போல்ட்நெஸ் உங்களுக்குதான் தேவை."

"உண்மைதான். ஆனா ஒரு விதத்துல நான் ஒரு குற்றவாளி. அது என்னைத் . தடுத்து நிறுத்துதே..."

"இப்படியே சுழட்டிச் சழட்டிப் புரியாம பேசிக்கிட்டிருந்தா எப்படி..."

"........"

"சரி... நான் கேள்விகளா கேட்கறேன். பதில் சொல்ல முடியுமா உங்களால?"

கனிஷ்காவின் அந்தக் கேள்விக்கு சந்துருவீடம் வேகமாக ஆமோதிப்பு.

"இது நல்ல முயற்சி. கேள்."

"எங்கம்மாவை உங்களுக்கு எப்ப இருந்து பழக்கம்?"

"அவளை எனக்கு இருபத்தி அஞ்சு வருஷமா தெரியும்."

"அதாவது நான் பிறக்கறதுக்கு அஞ்சு வருஷம் முந்தி இருந்து..."

"அப்ப உனக்கு வயசு இருபதா?"

"ஆமாம்... போகட்டும். எங்கம்மாவை நீங்க லவ் பண்ணீங்களா?"



"இல்ல...!"

"இல்லையா?"

"ஆமாம்... நம்ப முடியலையா உன்னால?"

"ஆமாம்.... அப்ப உங்களுக்குள்ள என்னதான் உறவு?"

"காதலன் காதலிங்கற அந்த உறவுதான். வேற என்ன?"

"நீங்க காதலிக்காதப்போ எப்படி அந்த உறவு உருவாக முடியும்?"

"அங்கதான் காதலைப் பத்தி நீ நிறைய தெரிஞ்சுக்க வேண்டியிருக்கு"

"எப்படி... எப்படி...?"

"உங்கம்மா என்னைப் பார்த்தப்போ நான் ஏற்கனவே கல்யாணமாகியிருந்தேன். நான் ஒண்ணும் அப்ப பேச்சலர் இல்ல..."

சந்துருவின் அந்த விளக்கத்தால் கனிஷ்கா முகத்தில் வியப்பலைகள் கூடையில் இருந்து கொட்டிய பந்துகளைப்போல உருண்டு ஓடின.

"இது இன்னும் உனக்கு அதிர்ச்சியா இருக்குல்ல...?"

"ஆமாம்... கல்யாணம் ஆன உங்களைக் காதலிக்க எப்படி எங்க அம்மாவால் முடிஞ்சது?"

"அதுதான் காதலக்கு இருக்கற சக்தி."

"மண்ணாங்கட்டி இதோ பாருங்க - நானும் காதலிச்சுக்கிட்டு இருக்கற ஒரு ஒருத்திதான். எது காதல்னு எனக்குத் தெளிவாகவே தெரியும். ஆமா நீங்க உண்மையைச் சொல்றீங்களா... இல்லை புளுகறீங்களா?"

"உன் அம்மாமேல உனக்கு இருக்கற பற்றும்

பாசமும் உன்னை இப்படிக் கேக்க வைக்குதுன்னு நினைக்கறேன்."

"எக்ஸாக்ட்லி... அம்மாக்கு காதல்னாலே அலர்ஜி. அதை ஒரு இளவயசுப் வைத்தியமனு சொல்வாங்க. அம்மா ஒண்ணும் அடுப்படி பூனை இல்ல. இங்கிலீஷ் புரொபஸர். இன்னிக்கெல்லாம் ஒத்தெல்லோ, ஹாம்லெட், கேக்ஸ்பியர்னு அம்மா பாடம் நடத்த ஆரம்பிச்சா க்ளாஸ்ல பின் ட்ராப் சைலன்ஸ்தான்..."

"தெரியும்... உங்கம்மாகிட்ட இங்கிலீஷ் பேச்சு மட்டும் இல்ல கையெழுத்தும் சூப்பர்பா இருக்கும். அதுலையும் ரோமன் லெட்டர்ல அவங்க எழுதினா கோலம் போட்ட மாதிரி இருக்கும்."

"அப்படிப்பட்டவங்க எப்படிக் கல்யாண மான உங்களை லவ் பண்ணியிருப்பாங்க?"

"பண்ணாங்க... எப்படிப் பண்ணாங்கன்னு உங்க அம்மாக்கிட்டையே கேள்."

"அவங்கதான் வாயையே திறக்கமாட்டேங் றாங்களே..."

"என்னாலையே முடியலை... அவளால எப்படி முடியும்?"

"எனக்கு இந்த சமாதானமெல்லாம் வேண் டாம். என்ன நடந்தது. ஏன் அம்மா உங்களைப் பார்த்துட்டு தூக்குப் போட்டுக்கப் போனாங்க..?"

"குற்ற உணர்வா இருக்கலாம்..."

"குற்ற உணர்வா... அம்மாக்கா?"

"உடனே அம்மா ஒரு மனிதருள் மாணிக்கம், அவங்க ஈ எறும்புக்குக்கூட கேடு செய்தது கிடையாதுன்னு ஆரம்பிச்சிடாதே.."



படுவேகமாக பதில் சந்துருவிடம்.

கனிஷ்காவும் அந்த பதிலைத் தொடர்ந்து கண்களில் கனலோடு ஒருமாதிரி பார்த்தாள்.

"ஆமாம்... நீகூட காதலிக்கிறேன்னு சொன் னியே. உன் காதல் உன் அம்மாவுக்குத் தெரியுமா?"

"என் காதல் பற்றி இப்ப நாம பேசவேண்டாமே..."

"உனக்கு நான் பேச்ச மாத்தறது பிடிக்கலை... அப்படித்தானே?"

"ஆமாம்... எனக்கு என் அம்மா வேணும். அவங்க சந்தோஷம்தான் எனக்கு பெருசு. என்னை வளர்க்க அவங்க பட்டபாடு எனக்குத்தான் தெரியும்..."

"சபாஷ்... அம்மா மேல இவ்வளவு பாசமா உனக்கு?"

"ப்ளீஸ்... உங்களைப் பார்த்துட்டு அம்மா ஏன் தற்கொலை செய்துக்கப் பார்த்தாங்க? பதில் சொல்லுங்க."

"அதான் சொன்னேனேமா... குற்ற உணர்வு."

"எப்படி...? விளக்கமா... ப்ளிஸ்ஸ்..."

"அதுக்கு முந்தி உன் அம்மா கல்யாணம் ஆன என்னை எதனால காதலிச்சாங்கன்னு உனக்குத் தெரிய வேண்டாமா?"

"ஆங்... ஆமாம்... அதுவும் ஒரு இம்பார்ட்டண்ட் கேள்விதான்."

"நான் கல்யாணம் செய்துகிட்ட பொண்ணு ஒரு ஹிஸ்டீரியா பேஷண்ட். சமயத்துல வெறி பிடிச்சமாதிரி என்னை கடிச்சுடுவா... கடிச்சா அது சும்மா சாதாரண கடியா இருக்காது. இதோ இத் காது இருக்குதே... காது..."

சந்துரு காதைக் காட்டினார். அதில் தையல் போடப்பட்ட தழும்பு பளிச்சென்று தெரிந்தது.

"இதை ஒரு தடவை அப்படியே கடிச்சு துப்பிட்டா- அப்புறம் பொறுக்கி எடுத்துகிட்டு போய் தெச்சுட்டேன்வா பார்த்துக்கையேன்-"

"ஸோ- ஒரு ஹிஸ்டீரியா பேஷண்ட் கிட்ட நீங்க பட்ட அவஸ்தையைப் பார்த்து அம்மாவுக்கு உங்க மேல அனுதாபம் வந்துச்சாக்கும்-"

"அனுதாபமா இருந்தாதான் தேவலையே- அது காதலால போயிடிச்சு."

"எந்த நம்பிக்கைல அம்மா உங்களைக் காதலிச்சாங்க? நீங்க உங்க மனைவியை டைவர்ஸ் பண்ணிடுவிங்கற நம்பிக்கையிலையா?"

"நான் அப்படித்தான் நினைச்சேன். ஆனா உங்கம்மா அப்படி எல்லாம் நினைக்கல. இந்த இடத்துல அவ ஏன் என்னை நேசிச்சாங்கறத நான் என் வாயால சொன்னா தற்பெருமையா தெரியும் உனக்கு. ஆகையால் இதுக்கான பதிலை உன் அம்மாகிட்டையே கேட்டு தெரிஞ்சுக்கோ."

"சரி... அப்புறம் என்ன ஆச்சு? உங்களோட அந்த ஹிஸ்டீரியா மனைவி என்ன ஆனாங்க?"

"அவளோட அப்பாவே கோர்ட்ல டைவர்ஸ் ஃபைல் பண்ணி எனக்கு விடுதலை வாங்கித் தந்துட்டாரு. நான் எவ்வளவோ சொன்னேன்... காரணம், என் மனைவி குணமாயிடுவாங்கற நம்பிக்கைதான்."

"ஓ... நீங்களா டைவர்சுக்கு முயற்சி செய்யலையா?"

"இல்ல- என்னால முடியுல. பாவம் பத்மினி."

"அதான் அவங்க பேரா...?"



"ஆமாம்- உன் அம்மாவை நம்பித்தான் அவ விவாகரத்துக்கு சம்மதிச்சா-"

"இது என்ன புதுக் குழப்பம்...?"

"குழப்பமெல்லாம் இல்லை. அதான் உண்மை. பத்மினிக்கு உன் அம்மா என்னைக் காதலிச்சது தெரியும். அதேசமயம் அவளோட மன பாதிப்பால அவ என்னைப் பாடா படுத்தினம் தெரியும். தெளிவான மனநிலைல இருக்கும்போது எனக்காக அழுவா. 'நான் உங்களுக்குப் பொருத்தமில்லாதவங்க. என் அப்பா தன் சொத்து பத்தால உங்களை விலைக்கு வாங்கிட்டாரு' அப்படி இப்படின்னுவா-"

"ஓ- காம்ப்ளிகேட்டட்டான கேரக்டர்னு சொல்லுங்க."

"எப்படி சொன்னா என்ன- இப்ப அவளும் இல்ல. உங்கம்மாவும் என்னை விட்டுட்டு வேற ஒருத்தரை கல்யாணம் பண்ணிகிட்டு போயிட்டாங்க-"

"கொஞ்சம் தெளிவா - குழப்பாம - ஆரம்பத்துல இருந்து சொல்லுங்களேன். உங்களைக் காதலிச்ச என் அம்மா ஏன் உஙகளைக் கல்யாணம் பண்ணிக்கல?"

"இந்தக் கேள்விக்கு சத்தியமா இந்த நிமிஷம் எனக்கு விடை தெரியாது. கொஞ்ச நாள் பொறுமையா காத்திருங்க, நல்ல பதிலோட வ்ர்றேன்'னு நம்பிக்கையா சொல்லிவிட்டு போனா உன் அம்மா... என்கிட்ட மட்டுமில்ல... என் மனைவியான பத்மினிகிட்டேயும்-"

"அப்ப உங்களுக்கு விவாகரத்து ஆயிருந்திச்சா...?"

"அமாம்... அந்த வாக்குறுதியைக் கூட கோர்ட்டுக்கு வந்து உன் அம்மா கொடுத்துட்டுப் போனா. ரொம்ப நம்பிக்கையா சொல்லிட்டுப் போனா.. என் மாமனாரும் அப்ப அங்க இருந்தார்.

'மாப்ள, 'இனியாவது நீங்க நல்லா இருங்க என் குடும்ப நினைப்பே வேணாம்'னு சொல்லட்டுப் போய்ட்டார்.

நானும் உன் அம்மாவுக்காக காத்திருக்க ஆரம்பிச்சேன். அது இன்னிக்கு அவ மகளான உன்கூடப் பேசற வரை தொடர்ந்து கிட்டிருந்துருக்கு. வேடிக்கையா இல்லை?"

சந்துரு கேட்ட தொனியில் ஏராளமான ஏளனம். துக்கம், சுயபச்சாதாபம் என்று எல்லாமே இருந்தது.

கனிஷ்காவிடம் ஒரு இனம் புரியாத கலக்கம் கூடவே அடுத்து என்ன கேட்பது, எதைக் கேட்பது என்பது தெரியாதபடி ஒரு குழப்பம்!

'அதன்பின் என்ன நடந்திருக்கும்?'

'அம்மா எதனால காதலில் பிறண்டாள்?'

அவளுக்குள் கேள்விப்பட்சிகள் தங்களது அலகால் கொத்தத் தொடங்கிவிட்டன.

## 7 காதல்! இதில் தோற்பதே உண்மையான வெற்றி!

கூலிங்கிளாஸைத் தேய்த்து கண்முன் ஏற்றிக் கொண்டு உற்சாகமாக வேலைக்குப் புறப் பட்ட ராமையே வெறித்துக் கொண்டிருந்தார் தாத்தா.

"என்ன தாத்தா லுக் விட்றே... ஏதாவது அட்வைஸ் பண்ணிகிட்டேயிருப்பியே. இன்னிக்கு என்ன அட்வைஸ் பண்ணலாம்னு



யோசிக்கிறியா?"

"இல்லப்பா.. இனி நீ அட்வைஸ் பண்ணு. நான் கேட்டுக்கறேன். அதுதான் எனக்கு நல்லதுன்னு தோணுது."

தாத்தாவின் பதிலால் ஒரு வினாடி திணறிப் போனான் ராம். அவரை மலங்க மலங்கவும் பார்த்தான்.

"ஆமாம்.. நான் இன்னும் எவ்வளவு நாள் இருப்பேனோ தெரியாது. என் பேச்சைதான் நீ கேட்க மாட்டேங்கறே. போகட்டும். உன் பேச்சை நான் கேட்கறேன். உனக்கு சந்தோஷம்தானே?"

"என்ன தாத்தா.. சைலண்டா என்னைக் கவிழ்க்க ஏதாவது பிளான் பண்றியா?"

"இல்லைய்யா.. நெஜமாத்தான் சொல்றேன். உன் மாமன் மகளும் 'ஆளை விட்று தாத்தா'ன்னு சொல்லவிட் ஓடிப் போய்ட்டா.

நான் ஒரு கணக்குப் போட்டேன். ஆனா எதுவுமே டேலி ஆகலை. என்ன பாவம் பண்ணேனோ? உன் அம்மாவைத்தான் நல்லபடியா வாழவெச்சு பாக்க முடியலை. உன்னையாவது பாத்துட்றேனே.."

"தெரியும் தாத்தா... நீ இப்படி மனசு மாறுவேன்னு எனக்குத் தெரியும்."

"அதுசரி.. நீ விரும்பற பொண்ணு யாரு.. பேர் என்ன? விபரத்தைச் சொல்லேன்."

"திரும்பவும் கேட்கறேன். என்கிட்ட விபரத்தைக் கேட்டு தெரிஞ்சுகிட்டு அந்தப் பக்கமா சினிமா வில்லன் மாதிரி ஏதாவது சதிவேலை பண்ணமாட்டியே.."

"சில சதியெல்லாம் சினிமால மட்டும்தான்

நடக்க முடியும். ஏன்னா நிஜவாழ்க்கைல அந்தமாதிரி சதி பண்ண யாருக்கும் தைரியம் கிடையாது. குறிப்பா எனக்குக் கிடையாது. நீ விரத்தைச் சொல்லு. நல்ல பொண்ணா...? குடும்பத்துக்கு ஏத்த பொண்ணா? அவங்க குடும்பத்துல உங்க காதலை ஏத்துக்குவாங்களா?"

"இப்பல்லாம் முந்தி மாதிரி இல்ல தாத்தா. காதல் ஒரு சகஜமான விஷயமாயிடிச்சு. பல குடும்பத்துல, பல அப்பாங்க, பொண்ணுங்க காதலிக்க மாட்டாங்களான்னு ஏங்கறாங்க. காதலிச்சா எதிர்க்கற மாதிரி நடிக்கிறாங்க. ஏன்னா கல்யாண மண்டபத்துக்கு வாடகை கொடுத்து நகை போட்டு கல்யாணம் பண்ணிக் கொடுக்கற செலவு அவங்களை அப்படி எல்லாம் செய்ய வைக்குது. ஓடிப் போய்ட்டா இரண்டு மாலை செலவுதானே... அப்புறம் ஏத்துக்கிட்டாலும் நினைச்சப்போ முறுக்கி முறுக்கி மாப்ளை நெத்தியில நாமம் போடலாம் பாருங்க..."

"ஒரு ஆணுக்கும் ஒரு பெண்ணுக்கும் உறவு ஏற்படுத்தற ஒரு நல்ல விஷயம் தான் கல்யாணம் கறது. ஆனா அது எப்படி எப்படியெல்லாம் சுத்தி இருக்கறவங்கள மாத்துது பாத்தியா?"

"சரி தாத்தா.. எனக்கு பேங்க்குக்கு டயமாச்சு நான் அந்தப் பெண்ணோடையே வர்றேனே சுருக்கமா சொல்லிக்கறேன். என் கனிஷ்கா ஒரு தேவதை. வீரமான ஒரு கவிதை மாதிரி அவ. அவ வாயால என்னைப் பார்த்து 'ஐ லவ் யூ'ன்னு சொல்ல வைக்க நான் பட்ட பாடு உனக்குத் தெரியாது."

உற்சாகமாக சொல்லிக்கொண்டே பைக்கை நெருங்கிச் சென்று அதில் ஏறி அமர்ந்தான்.



பைக் சீட்டில் அமர்ந்தவனின் சட்டை பாக்கெட்டில் செல்ஃபோனின் சிணுங்கல்.

திரையைப் பார்த்தான். கனிஷ்காதான்!

அடுத்த நொடி பரபரப்பானான்.

"ஏய் கனி... என் இது? இப்பதான் போன் பண்ண மனசு வந்துச்சா உனக்கு?"

"அது வந்து ராம்... இங்க கொஞ்சம் குழப்பமான சூழ்நிலை."

"அதுக்கும் எனக்கு போன் பண்றதுக்கும் என்ன சம்மந்தம். இதுல உன் செல்லை வேற ஆஃப் பண்ணி வெச்சுட்டே என்னாலையும் உன்னோட பேச முடியலை."

"சாரி ராம்.. வெரி சாரி."

"இட்ஸ் ஓ.கே... எப்படி இருக்கு மதுரை? செட் ஆயிட்டியா...? நான் எப்படியும் வர்ற 1ஆம் தேதி அங்க ட்யூட்டில ஜாய்ன் பண்ணிடுவேன். கே.கே. நகர் பிராந்னு சொல்லியிருக்காங்க."

"அதை விடு... உன்னால உடனே கிளம்பி மதுரை வர முடியுமா?"

"என்ன விஷயம்?"

"ஒரு சீரியஸான விஷயம்..."

"என்ன கனி.. விபரமா சொல்."

"அம்மா சூய்ஸைட்..." - அழுகை.

"என்னது.. அம்மா சூய்ஸைட்டா.. யார்? உன் அம்மாவா...? கனி.. கமான்.. ஆழாம விஷயத்த சொல்."

"என்னத்தடா சொல்ல.. பருவ வயசுல நாம காதலிக்கலாம். இயற்கை. ஆனா அதே காதல் அம்மாவை இந்த மிடில் ஏஜில வந்து தாக்கியிருக்கே அதை என்னன்னு சொல்றது?"

"மை காட்... என்ன கனி நீ! பாலசந்தரோட அபூர்வ ராகங்கள் படம் பார்க்கற மாதிரி இருக்கு எனக்கு. உன் அம்மாவுக்குக் காதலா..?"

"அசிங்கம்டா. ஆனா என்னென்னவோ நடந்துடுச்சி. சூய்சைட் பண்ணிக்கப் போய்... காப்பாத்தி..."

"இப்ப எப்படி இருக்காங்க..?"

"இருக்காங்க... மெகா சீரியல் ஹீரோயின் மாதிரி அழுதுகிட்டே..."

"இதைத்தான் குழப்பமான சூழ்நிலைன்னியா?"

"நிஜமா சொல்லப்போனா அசிங்கமான சூழ்நிலை. நான் நெருப்புல நின்னுகிட்டிருக்கேன். நீ வந்தாதான் எனக்கு ஆறுதலா இருக்கும். உடனே வர்றியா?"

"கவலைப்படாதே... இதோ இப்பவே அப்படியே நேரா பைக்லையே வரேன்."

"வேண்டாம். பஸ்ல வா. எனக்கு என் காதலாவது ஜெயிக்கணும். உனக்கு ஏதாவது ஆயிடப் போகுது..."

"பைத்தியம்... பைக்தான் சௌர்யம். ட்ராஃபிக்ல கூட பூந்து வந்துட முடியும். என்ன கொஞ்சம் பாடி பெய்னா இருக்கும். உனக்காக அதைக்கூட நான் தாங்கிக்கலேன்னா எப்படி பைத்தியம் உனக்கு ஒரு குட் நியூஸ். என் தாத்தா நம்ம காதல் பத்தி கேட்டார். பச்சைக் கொடியும் காட்டிட்டாரு..."

"சரி சரி... நீ முதல்ல வா. நிறைய பேசணும்."

"இதோ... கெடிகாரத்தைப் பார்த்துகிட்டே இரு. முன்னூறாவ நிமிஷம் நான் உன் வீட்டு



முன்னால பைக்ல வந்து ஹார்ன் சவுண்ட் கொடுப்பேன்."

"தேங்க்யூடா..."

அவளது நன்றியோடு செல்ஃபோனை மடக்கி சட்டைப் பையில் போட்டுக் கொண்டு பைக்கில் தாவி ஏறினான்.

தாத்தா காதிலும் அவனின் செல்ஃபோன் பேசு விழுந்திருந்தது. முகத்தில் அதன் எதிரொலி உணர்ச்சிகள்.

## 8 காதல்! உணர்வை மின்சாரமாக்கும் ரசவாதி!

**த**ன் செல்ஃபோனை மடக்கிவிட்டுத் திரும்பினவள் எதிரில் காஞ்சனா!

படுக்கை நோயாளி போல ஒரு தோற்றம்.

கண்ணிலும் ஈரமே இல்லாத ஒரு வறட்சி.

அவள் நின்று நோக்கும் விதமே ஒரு மாதிரி இருந்து.

"என்ன?" -கனிஷ்கா ஒரு மாதிரி அலட்சியமாகக் கேட்டாள்.

"யாரோட பேசிகிட்டிருந்தே செல்ஃபோன்ல..?"

"எதுக்குக் கேக்கறே?"

"என்னடி கேள்வி இது- நான் கேக்காம யார் கேட்பா?"

"அடேங்கப்பா... மகள் மேல அக்கறையா?"

"கனி..."

"நான் இனி உங்க வரைல கனி இல்ல, காய்!"

"இதோ பாருடி... வாய் இருக்குன்னு

எதையாவது பேசாதே... நான் ஏற்கனவே நொந்துபோய் இருக்கேன்."

"அடேயப்பா- யார்கிட்ட காது குத்தறே-"

"கனி... உனக்கு என்ன ஆச்சு?"

"இன்னும் என்ன ஆகணும். நான் உன் மகள் தானான்னு கூட எனக்கு சந்தேகமெல்லாம் வருது."

"வாயை மூடுடி- அறிவு கெட்ட கழுதை."

டென்ஷனாகி, கடின வார்த்தைகளோடு கனிஷ்காவையும் நெருங்கி அவள் கன்னத்தில் ஓங்கி ஒரு அறையும் அறைந்தாள் காஞ்சனா. பதிலுக்கு புலிபோல பார்த்த கனிஷ்காவும், "இப்படி அறைஞ்சுட்டா உன் தப்பெல்லாம் சரி ஆயிடுமா- நீ தற்கொலை செய்துக்கப் போனியே அதுக்கான விடை எனக்குத் தெரிய வந்துடுமா-?"

"இதோ பார்- இப்பவும் சொல்றேன். நான் காதலுக்கு முதல் எதிரி. அது ஒரு பருவ மயக்கம்தான். நான் தற்கொலை செய்துக்கப்போனது அந்த மயக்கத்துக்கு நான் ஆளானதுக்காக இல்ல. அது வேற காரணம்."

"அது என்ன?" சொல்லித் தொலையேன்."

"என்னத்த சொல்ல... நான் விலகிப் போக நினைச்சாலும் காலம் காலைச் சுத்தின பாம்பு மாதிரி என்னைக் கடிச்சா நான் என்னத்தைப் பண்ணுவேன்?"

"இதோ பாரும்மா... இந்தப் பழமொழி, ப்ராவெர்ப் இதெல்லாம் இப்ப எனக்குத் தேவையில்லை. என்ன நடந்தது அதைச் சொல்."

"சொல்றேன்- ஆனா நீ அதிர்ச்சியடையக் கூடாது."



"இப்ப என்ன அப்படியே அமைதியிலையா நான் இருக்கேன்."

"சரி... சந்துரு உன்கிட்ட என்ன சொன்னார்?"

"அது எதுக்கு உனக்கு? நீ உன் விஷயத்தைச் சொல்."

"இல்ல... அவர் என்ன சொன்னார்ங்கறது எனக்கு முக்கியம்."

"அப்படியா- சுருக்கமா சொல்றேன். அவர் உன்னைக் காதலிக்கலையாம். நீதான் அவரைக் காதலிச்சியாம். கல்யாணம் பண்ணிக்க சம்மதமும் தந்தியாம். அதனாலதான் டைவர்சும் நடந்ததாம். ஆனா நீ அதுக்கப்புறம் திரும்பியே வரலையாம். ஸ்டில் அவர் உனக்காக காத்திதுக்கிட்டிருக்கறவராம்."

"அப்படியா சொன்னார்?"

"ஆமா... நீதானே அவரைக் காத்திருக்கச் சொன்னவ?"

"உண்மைதான். சந்துரு ஒரு ஜென்டில்மேன். நான் என் வாழ்கைகல பார்த்த முதலும் கடைசியுமான முழு ஆம்பளையே அவர்தான்."

"அப்ப அவரை ஏன் ஏமாத்தினே-?"

"எல்லாம் தலை எழுத்துடி- தலை எழுத்து."

"என்ன- உன்ன அப்பாவும் அம்மாவும் உன் காதலுக்கு சம்மதிக்கலையா-? தற்கொலை செய்துகிட்டு செத்துடுவோம்னு மிரட்டினாங்களா...? உனக்கு வேற வழி தெரியலையா?"

"கேளு- இந்தக் காலத்துப் பொண்ணாச்சே. நீ இதுவும் கேப்பே. இதுக்கு மேலையும் கேப்பே."

"ஆனா உன்கிட்ட இருந்து உருப்படியான பதிலே இல்லையே. என்ன நடந்தது. காத்திருக்கச் சொன்ன நீ ஏன் சந்துருவைக் கல்யாணம் பண்ணிக்க வரலை?"

"அதை எப்படிச் சொல்வேன். ஒரு ஹிஸ்டீரியா பேஷண்ட்கிட்ட இருந்து விடுதலையடைஞ்ச அவரை ஒரு மனநிலை பாதிக்கப்பட்ட - பிரக்ஞையே இல்லாத நான் எப்படிப் போய்ப் பார்த்திருக்க முடியும்?"

"என்னது. உனக்கு மனநிலை பாதிப்பா?"

"ஆமாம். நா பயணம் செய்த பஸ்சுக்கு சில தேச விரோதிங்க 'பந்த்' துங்கற பேரில் தீயை வெச்சுட்டாங்க. என் கண் எதிர்க்க இருபதுபேர் கருகி செத்துப் போனதைப் பார்த்த நான் அதுக்கப்புறம் ஒரு வருஷம் வரை சுயநினைவுலயே இல்லை."

காஞ்சனாவின் அந்த பதில் முதல் தடவையாக கனிஷ்காவை அப்படியே புரட்டிப் போட்டது. 'அய்யய்யோ' என்று கைகளை எல்லாம் உதறவும் வைத்தது.

"அந்த இடைவெளில என்னென்னவோ நடந்து போச்சு. என் அப்பா அம்மா அதாவது உன் தாத்தா பாட்டி எனக்கு மனநிலை பாதிச்ச விஷயத்தை பத்திரிகை செய்தியாக்கவோ அதை வெச்சு அனுதாபம் தேடவோ விரும்பலை. அதனால என் கல்யாண வாழ்க்கை சிக்கலாயிடும்னு நினைச்சு எனக்கு விபத்து ஏற்பட்டதையே ரகசியமாக்கிட்டாங்க.

ஆனா அவங்களுக்கு ஒரு உண்மை தெரியல!

இப்படி மறைக்கறதாலேயே எனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையாம போகப் போகுங்கறதுதான் அந்த உண்மை."



காஞ்சனா கொஞ்சம் இடைவெளி விட்டு மிடறு விழுங்கினாள். கனிஷ்கா ஒரு ஓரமாகப் போய் உட்கார்ந்துவிட்டாள். "அம்மா தப்பு செய்திருக்கிறாள். அதனால்தான் பேசவே தயங்குகிறாள்' என்றெல்லாம் நினைத்துக் கொண்டிருந்தது. அப்படியே தலைகீழாக மாறி 'அம்மா இவ்வளவு பரிதாபத்துக்கு உரியவளா?' என்பது போன்ற உணர்வும் ஒரு புதுவித பச்தாபமும் அவளுக்குள் ஒரு அடைமழை - அதிக வேகமோ வீச்சலோ இன்றி பெய்வது போலப் பெய்ய ஆரம்பித்திருந்தது.

'"எனக்கு மனநிலை பாதிக்கப்பட்ட அந்த நேரத்துல எனக்கு ட்ரீட்மெண்ட் பண்ண டாக்டரைப் பத்தியும் இப்ப நீ தெரிஞ்சுக்கணும்."

காஞ்சனாவிடம் திரும்பவும் ஒரு ஆரம்பம்.

"டாக்டர்களைக் கடவுளுக்கு சமமா சொல்வாங்க. ஏன்னா வலிங்கற துன்பத்தைப் போக்கற அதிகாரம் கடவுளுக்கு அடுத்து இந்த உலகத்துல அவங்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கு.

உத்யோகத்துலையும் அது ஒரு அற்புதமான உத்யோகம். ஆத்மார்த்தமா சேவையும் செய்யலாம். பெட்டி பெட்டிய பணமும் சம்பாதிக்கலாம். ஆனா இன்னிக்கு யாரும் சேவையெல்லாம் செய்யறதே கிடையாது. கையைப் பிடிச்சு நாடித்துடிப்பை கணிச்சுட்டாலே ஐம்பது ரூபாயை பேஷண்ட் எடுத்து வெச்சுடணும். சின்ன காம்ப்ளிகேஷன்னாலும் ஸ்கேன், எக்ஸ்ரேனு அனுப்பிடுவாங்க. அங்க இருந்தும் நல்ல கமிஷன் வந்துடும்.

யாராவது இதை எல்லாம் ஏன்னு கேட்டா மெடிக்கல் படிக்க நான் அஞ்சு லட்சம் செலவு

செஞ்சேன். ஆறு லட்சம் செலவு செஞ்சேன்னு சொல்லி - தொழில் செய்யறவங்க மெஷின் வாங்கற மாதிரி எம்.பி.பி.எஸ். சர்ட்டிபிகேட்டை வாங்கின விஷயத்தைச் சொல்வாங்க. அந்தப் பணத்தை எல்லாம் எப்படி எடுக்கறதாம்னு திருப்பிக் கேட்பாங்க.

மொத்தத்துல டாக்டர்கள் இன்னிக்கு விலை போய்ட்ட சராசரிகளாயிட்டாங்க..."

"அம்மா..."

"என்ன நீ கேக்கப்போறேன்னு தெரியும். சில டாக்டர்களுக்கு ஏன் எல்லாரையும் சொல்றே. என் அப்பாவும் ஒரு டாக்டர்தானே?'ன்னு கேப்பே இல்லையா?"

கனிஷ்கா மெல்ல தலையசைத்து ஆமோதித்தாள்.

"ஒரு உண்மை தெரிஞ்சுக்கோ கனி... சில டாக்டர்கள்தான் இப்ப சேவை செய்யறாங்க. கடவுள் தன்மையோட இருக்காங்க. பல டாக்டர்ள் பெட்டிய நிரப்பிக்றதுலதான் குறியா இருக்காங்க."

"சரி... இப்ப எதுக்கு இந்த டாக்டர் புராணம்?"

"இருக்கே... எந்த டாக்டர் எனக்கு ட்ரீட்மெண்ட் கொடுத்தாரோ அவரே என் இளமையையும் வேட்டையாடிட்டாரே..."

காஞ்சனாவின் பதில் கனிஷ்காவின் அடிவயிற்றில் பனிக்கத்தியை செருகின மாதிரி இருந்தது.

"அம்மா..."

"அதிர்ச்சியா இருக்குல்ல...?"



"இதை... இதை எல்லாம் எப்படிம்மா நீ இவ்வளவு நாளும் ரகசியமா வெச்சிருந்தே...?"

"என்னம்மா பண்றது... கெடுத்தவரே கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொல்லி கல்யாணமும் பண்ணிக்கிட்ட பிறகு புருஷன் ஒரு அயோக்யன்னு எப்படிச் சொல்ல முடியும்..."

"அப்ப என் அப்பாதான் அந்த டாக்டரா?"

"ஆமாம் கனி... நான் உன்கிட்ட விதியைப் பற்றிப் பேசும்போதெல்லாம் நீ சிரிப்பே... 'விதியாவது கிதியாவது - எல்லாம் நம்ம கைல இருக்கற விஷயம்'னு எதிர் வாதம் பண்ணுவே. தொட்டுத் தொட்டு எனக்கு ஏற்பட்ட அனுபவங்களை என்னன்னு சொல்வே?"

காஞ்சனாவின் கேள்விமுன் முதல் முறையாக அடங்கிப்போய் மௌனம் சாதித்தாள் கனிஷ்கா.

"என் பாட்டி அடிக்கடி ஒரு கருத்தைச் சொல்வாங்க. மனித வாழ்க்கை தண்டவாளத்துல ஓட்ற ரயில் வண்டி மாதிரின்னு... ரயிலால் வேகமா போகலாம்... இல்ல ஸ்லோவா போகலாம்... ஆனா அதோட பாதையை விட்டு மட்டும் போகவேமுடியாதுன்னு... வாழ்க்கையும் அப்படித்தான். விதிங்கற தண்டவாளத்துல அதோட பயணத்தை தடுத்து நிறுத்தற சக்தி யாருக்குமே கிடையாது. இதுக்கு நானே ஒரு முன்னுதாரணமாயிட்டேன் பார்த்தியா?"

இப்படிக் காஞ்சனா கேட்கவும் கனிஷ்கா முகத்தில் அந்த நிலையிலும் ஒரு புன்னகை துளிர்த்தது. அது 'நீ உளர ஆரம்பித்துவிட்டாய்...' என்று சொல்லாமல் சொல்லிற்று.

"என்னடி... இப்பவும் நான் 'விதின்னு சொல்றதை எல்லாம் உன்னால் ஏத்துக்க முடியலையா?"

"அப்சல்யூட்லி.. யாரும்மா கண்டுபிடிச்சா இந்த விதியை? இது முழுக்க முழுக்க கையாலாகாதவங்க தங்களோட சமாதானத்துக்காக பயன்படுத்தற ஒண்ணாநம்பர் சால்ஜாப்.."

"அப்ப எனக்கு ஏற்பட்ட தங்கு தடைகளை என்னன்னு சொல்வே.. நான் நினைச்ச மாதிரி எதுவுமே நடக்கலையே... வாழ்கை என்னை இழுத்துகிட்டேல்ல ஓடினுச்சு..?"

"இதெல்லாம் இப்ப நீ சொல்ற சமாதானம். உனக்கு ஏற்பட்ட விபத்து. அதனால உன் மனநலை பாதிக்கப்பட்டு சந்துரு சாரை பிரிஞ்சது வரை சரி.. உனக்கு மனநிலை சரியான பிறகு நீ அவரைத் தேடிப்போய் இருந்துருக்கலாமே.."

"எப்படி... உன்னை வயித்துல சுமந்துகிட்டா?"

"என்னை ஏன் கருவுல நீ அழிச்சிருக்கக் கூடாது? உன்னைக் கெடுத்த என் அப்பனை நீ கல்யாணம் செய்துகிட்டது கோழைத்தனத்தோட உச்சகட்டம்.."

"சபாஷ்! உன்னைக் கொன்னுட்டு, அவரோட தப்பையும் பொருட்படுத்தாம நான் சந்துருவைத் தேடிப் போய் 'உங்களோட வாழ வந்துட்டேன்'னு சொல்லியிருந்தாதான் நான் விதியை ஜெயித்தவளா?"

"நிச்சயமா.."

"அப்ப நான் தோத்தவளாகவே இருந்துட்டுப் போறேன். என் தங்கம் நீ உயிரோட



இருக்கறத விடவா எனக்கு அதெல்லாம் பெரிசு. அப்படி எல்லாம் போய் என்னத்ததடா சுனி பெருசா வாழ்ந்துட முடியும்? அப்படியே வாழ்ந்தாலும் அது ஒரு வாழ்க்கையா? அவ்வளவு சுயநலத்தோட ஒரு பொண்ணு இருக்கவே கூடாதும்மா."

"இல்லம்மா... உன்னைக் கெடுத்த அப்பாவையே கல்யாணம் பண்ணிகிட்டது மகா கொடுமை. கிராமப் புறங்கள்ளதான் தப்பை சரி செய்யறோம்னு இப்படிக் கூத்தடிப்பாங்க. படிச்ச ஒரு இங்கிலீஷ் பிரொபசர் நீ கூடவா.."

"என்ன கெட்டுப் போச்சு சுனி... அவர் அப்புறம் எவ்வளவு வருத்தப்பட்டார் தெரியுமா? நான் அவரை இக்னோர் பண்ணியிருந்தா அவருக்கு வாழ்கையோட நல்ல விஷயங்கள் தெரியாமலே போயிருந்திருக்கும்."

"என்ன பிரயோஜனம்... போகட்டும். அவர்தான் நான் பிறந்தப்பவே ஒரு ஆக்சிடென்ட்டுல போய்ச் சேர்ந்துட்டாரு. அதுக்கப்புறமாவது நீ சந்துரு சாரைப் போய்ப் பார்த்துருக்கலாமில்லியா?"

"பைத்தியம் மாதிரி பேசாதே. லைஃப்ல கல்யாணம்கறது ஒரு தடவைதான் நடக்கணும். அதுதான் மரியாதை. சந்துருவும் ஸ்டெப்னி இல்ல. இவர் இல்லன்னா அவருங்கறதுக்கு-"

"ஓ.கே.. உன் கருத்தை நானும் ஏத்துக்கறேன். இவ்வளவு நாள் காத்திருந்த சந்துரு சார்க்கு நீ இனி என்ன பதில் சொல்லப் போறே?"

"என்ன பதில் சொல்லணும்?"

"உனக்குத் தெரியாதா...? உன் பக்கம் இவ்வளவு நியாயங்கள் இருக்கும்போது எதுக்கு

தூக்கு போட்டுக்கப் போனே?"

"அது சந்துருவை அந்தக் கோலத்து பாத்த அதிர்ச்சியில் எனக்கு என்ன செய்யறதுன்னே தெரியல. எனக்கு ஒரு வழி அமைஞ்சா மாதிதி அவரும் யாரையாவது கல்யாணம் பண்ணிகிட்டு வாழ்ந்துகிட்டிருப்பார்னு நினைச்சேன். ஆனா எனக்காகவே காத்திருக்கற அவரோட நிலை என்னைத் திக்குமுக்காட வெச்சுடுச்சு.

குறிப்பா நான் உயிரோட இருந்தா அதுக்கு, ஒரு நல்ல பதில் சொல்லியே தீரணும். அதனால்தாண்டி தற்கொலை செய்துக்க முயன்றேன்."

"இப்பதான் நீ பாய்ண்ட்க்கே வந்துருக்கே. அப்ப உனக்கு ஒரு நல்ல பதில் சொல்லணும்கற எண்ணம் ஏற்பட்டிருக்கு."

"போதும் கனி... நீ என்னை கார்னர் பண்ணாதே உன் கேள்விகளுக்கெல்லாம் நான் பதில் சொல்லிட்டேன். விட்டா நீ எங்க போய் நிப்பேன்னு தெரியும்."

"அப்படியா?" -தலையை ஒரு மாதிரி சாய்த்துக் கொண்டு கனிஷ்கா் கேட்ட விதத்தில் ஒரு மலையளவு அழுத்தம்.

பரவால்லம்மா. இந்த விஷயத்துலயாவது நான் எப்படி யோசிப்பேன்னு நீ புரிஞ்சு வெச்சிக்கியே."

"வாயை மூடு. எனக்கு உன் கல்யாணம் தாண்டி இப்ப பிரதானம். வெளிய யார் காதுலையாவது விழுந்தா சிரிப்பாங்க."

"யார் சிரிச்சா எனக்கென்ன. யார் அழுதா எனக்கென்ன.... ஊரை எல்லாம் - பர்சனல் லைஃப்னு வரும்போது கன்சிடரே



பண்ணக்கூடாதும்மா."

"ஊரோட ஒத்து வாழத் தெரியலைன்னா எவ்வளவு படிச்சிந்தாலும் அவங்க படிக்காதவங்களோட சேர்த்தின்னு வள்ளுவர் சொல்லியிருக்கார். ஞாபகம் வெச்சுக்கோ."

"பாவம்மா வள்ளுவர். மேடைல பேசறவங்கதான் அவர் சொன்னதை வெச்சுக்கிட்டு தங்களை நிலை நிறுத்திக்கப் பார்க்கறாங்கன்னா நீயுமா- விட்றும்மா!"

"சரி- இதுக்கு மேல நான் உன்கூட வாதம் செய்ய விரும்பலை. நீயும் இனி இது விஷயமா எதுவும் பேசாதே. நாம உடனடியா சேலத்துக்கே திரும்பிப் போகப் போறோம். தயாரா இரு."

"இது என்னம்மா கிறுக்குத்தனம்?"

"இதுதான் புத்திசாலித்தனம். சந்துருவைப் பக்கத்துல வெச்சுக்கிட்டு என்னால எதுவும் பண்ண முடியாது. என் ட்ரான்ஸ்ஃபர் உத்தரவை திரும்பி வாங்கச் சொல்லப் போறேன். அதுக்குக் கொஞ்ச நாளாகும்னு சொன்னா அதுவரை லீவு போடப் போறேன்."

"அம்மா. எப்பவுமே நீ சரியான முடிவே எடுக்க மாட்டியா?"

வேகமாக எழுந்து நின்று கைகளை உதறிக்கொண்டு சற்று ஆசேவமாகவே கேட்டாள் கனிஷ்கா.

"சத்தம் போடாதே. இப்ப எதுக்குக் கத்திப் பேசறே."

"கத்தாம. இவ்வளவு நாள்தான் உனக்கு ஒரு திருப்தியான வாழ்க்கை கிடைக்கல. இப்ப அது ஏதோ ஒருவிதத்துல தானா தேடி வந்துருக்கு.

காலத்தால நீ சந்துருவுக்கு தெரிஞ்சோ தெரியாமலோ செய்த ஒரு தப்புக்கு பிராயச்சித்தம் தேடாம ஊரைவிட்டுப் போறேங்கிறியே..”

“பைத்தியமே.. வயசுப் பொண்ணு உனக்குக் கல்யாணம் பண்ணிப் பாக்க வேண்டிய எனக்கு போய் இன்னொரு கல்யாணமா... அதை நீயே சொல்றியே - உனக்கு நெருடலா இல்லை?”

“ஒரு நெருடலும் இல்லை. எனக்கு காதலோட தன்மை என்னன்னு தெரியும். வாழத்தாம்மா வாழ்ககை. வாய்ப்பு வரும்போதும் பூட்டிக்கப் பார்க்கிறியே..”

“திரும்பவும் சொல்றேன்... புதுமையா சிந்திக்கறதா நினைச்சு உளறாதே. எனக்கு விதி இருந்திருந்தா நாங்க எப்பவோ சேர்ந்துருப்போம். கூடாதுன்னு இருக்கு. அதான் பிரிஞ்சி போய்ட்டோம். பிரிஞ்சது பிரிஞ்சதாவே இருக்கட்டும்.”

“என்னைப் பத்திக் கவலைப்படாதம்மா. தயவு செய்து அவருக்கு ஒரு நல்ல பதில் சொல். சந்துரு எவ்வளவு பியூட்டிஃபுல் பர்சனா இருந்தா உனக்காகவே காத்துக் கிட்டிருந்துருப்பாரு... யோசிச்சு பார். ஒருநாள் வாழ்ந்தாலும் இப்படி ஒரு ஆண்கூட வாழ்ந்தா போதும்மா... விதி கிதின்னு எதையாவது பேசி உன் தலைல நீயே மண் அள்ளிப் போட்டுக்காதே..”

கனிஷ்கா கத்திப் பேசியதில் இருந்து கனிவுக்கு தாவி அதுவும் மாறி குழையும் குரலில் அவள் காஞ்சனா முன் நிற்க - பின்னால் நிழலாடியது - மரகதம்தான் வந்திருந்தாள்.

“ஆன்ட்டி..”

“நீங்க பேசறத வாசல்ல நின்னு



கேட்டுக்கிட்டுதான் இருந்தேன். இவங்க பேர்ல எனக்குகூட தொடக்கத்துல பயங்கல கோபம் இருந்தது. ஆனா விதி எப்படி எல்லாம் விளையாடியிருக்கு இவங்க வாழ்க்கைலங்கறத இப்ப தான் தெரிஞ்சுகிட்டேன். ஐ ஆம் வெரி சாரி..”

“ஆன்ட்டி.. உங்க சாரி இருக்கட்டும். உங்க பிரதரை இவங்க கல்யாணம் பண்ணிக்கறதுதானே நியாயம். அதுக்கு பதில் சொல்லுங்க.”

“உன் உணர்வைப் பாராட்றேன் கனிஷ்கா. ஆனா உன் கல்யாணத்தை யோசிச்சுப் பார்த்தியா? இவங்க கல்யாணம் செய்துகிட்டா அது உன் கல்யாணத்தை எவ்வளவு தூரம் பாதிக்கும் தெரியுமா?”

“அப்ப என் கல்யாணம்தான் இவங்க ஒண்ணா சேர தடையா?”

“என் வரைல அதுதான்.. மற்றபடி இவங்க சேர்ந்தா எனக்கு சந்தோஷம்தான். என் தம்பி முகத்துலையும் ஒரு அர்த்தமுள்ள சிரிப்பைப் பார்த்து நாளாச்சு.”

“நோ பிராப்ளம் ஆன்ட்டி. நான் ஒருத்தரை லவ் பண்றேன். அவர் எனக்காக எதையும் செய்வார். அவர் ஒண்ணும் சராசரி மனுஷர் இல்ல. சந்துர சார் மாதிரியே ஒரு ஃபன்டாஸ்ட்டிக்பர்சன்.”

கனிஷ்கர் விடாப்பிடியாக நின்றாள். அவளின் பதில் காஞ்சனாவை ஒரு உலுக்கு உலுக்கிவிட்டிருந்தது.

“கனி.. உனக்கும் காதலா?” என்றாள் காற்றுக் குரலில்.

"சாரிம்மா. நான் வைராக்யமாதான் இருந்தேன். ஆனா ராம் என்னைக் கரைச்சுட்டார்."

"ராமா.."

"ஆமாம்மா... பேங்க்ல ஒர்க் பண்றார். வெரிவெரி நைஸ் டைப்."

"நல்லவேளை இப்பவாவது சொன்னியே.."

"அப்ப உனக்கு சம்மதாமாம்மா..?"

"நான் முடியாதுன்னா நீ சும்மா இருந்துவிடுவியா?"

"அது எப்படி? உன்னைக் கன்வின்ஸ் பண்ண போராடுவேன்.."

"அது எனக்கு தெரியாதாக்கும்..?"

"அப்ப இப்பவே ஸ்ட்ரெய்ட்டா ஒகே'ன்னுதான் சொல்லேன்.."

"இதோ பார்.. எனக்கு உன் சந்தோஷம்தான் முக்கியம்.."

"இப்படி சொல்ற எனக்கும் உன் சந்தோஷம்தான் அம்மா இனி முக்கியம்.."

"முதல்ல உன் கல்யாணம். பிறகுதான் எந்த விஷயமும்.."

"அப்ப என் கல்யாணம் நடந்துட்டா நீயும் சந்துரு சாரும் சேர்றதுல எந்த ஆட்சேபனையும் இல்லைன்னு சொல்லாம சொல்றே.."

கனிஷ்காவின் மடக்கல்முன் அதற்குமேல் பேச முடியாதபடி ஒருவித வெட்கம் காஞ்சனாவைக் கவ்வியது.

மரகதத்துக்கும் ஒரு புயல் திசைமாறி தென்றல் அங்கே தவழ ஆரம்பித்விட்டது போல



ஒரு உணர்ச்சி.

"இனியாவது உங்க எல்லாருக்கும் நல்லதே நடக்கட்டும்.." என்றபடி அங்கிருந்து புறப்படக் காலெடுத்தாள் மரகதம்.

"ஆன்ட்டி.. என் ஆள் சேலத்துல இருந்து வந்துகிட்டே இருக்கார். எங்க லைன் எப்பவோ க்ளியர். இவங்க லைன்தான் க்ளியர் ஆகணும். உங்க தம்பிகிட்ட.."

"அவன் இனி என் தம்பி மட்டுமல்ல உன் அப்பாவும் கூட.. ஓகே.."

மரகதம் அந்த பதிலில் ஒரு அசத்து அசத்திவிட்டாள்.

கனிஷ்காவின் கண்களிலும் சட்டென்று கண்ணீர் திரண்டுவிட்டது!

## 9 காதல்! இது பனியில் எரியும், நெருப்பில் அணையும் வினோதம்

"கீங்.. கிங்..!"

வாசற்புரத்தில் இருந்து மோட்டார் பைக்கின் சப்தம் கேட்டது. ராம் வந்துவிட்டிருந்தான். வெகுவேகமாக ஓடி வாசலுக்கு வந்தாள் கனிஷ்கா.

ராம் பைக்கை நிறுத்தியவனாக அவளை சற்று பயத்துடன் பார்த்தான்.

"ராம் உள்ள வா.." - உற்சாகமாக அவள் அழைக்கவும் ஆச்சரியமானான்.

மார்பில் கையை வைத்து 'என்னையா அழைக்கிறாய்' என்று கேட்டான்.

அவளும் துள்ளலாக 'ஆமாம்' என்றாள்.

அதன்பின் பைக்கை ஓரம்கட்டி நிறுத்தி விட்டு கூலிங்கிளாசையும் கழட்டி சட்டைப் பாக்கெட்டில் வைத்தபடி நடந்தான்.

அவள் அவன் கை பற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

"கனி.. ரொம்ப எனர்ஜெடிக்கா தெரியறியே. அழுது வடிஞ்சிகிட்டிருப்பேங்கற நினைப்போட தான் நான் வந்தேன்."

"ஆமாம் ராம்.. அழுத வடிவேண்டிய ஒரு நிலைதான் ஆனா மழை மேகம் கலைஞ்சு சூரியன் சுட்டெரிக்கிற மாதிரி ஒரு திடீர் மாற்றம்.."

அவள் சொல்லி முடிக்க எதிரில் காஞ்சனா வர-

"ராம் அம்மா.." - என்று கனிஷ்கா அறிமுகம் செய்து வைத்தாள். ராமும் பணிவாக வணங்கினான். அவளும் இணக்கமாகச் சிரித்தாள். ஆச்சரியமாகப் பார்த்தான். 'படுத்த படுக்கையில் நோயாளி போல கிடப்பாள் என்று நினைத்து வந்தால் இவளும் ஆச்சரியமளிக்கிறாளே..'

"என்னப்பா.. எல்லாமே நீ நினைச்சதுக்கு நேர்மாறா இருக்கா?

ஆமாம், நீ போன் பண்ணினதுக்கு அப்புறம்தான் சம்திங் ஏதோ நடந்துருக்கணும்."

"உக்காருங்க ராம். கனி.. நீயே போய் சாருக்கு காபி போட்டு எடுத்துகிட்டு வா.."

"அய்யோ வேண்டாம் ஆன்ட்டி. வழியில நல்ல பசி. ஹோட்டல் ஒண்ணுல நுழைஞ்சிட்டேன். வயிறு ஃபுல்!"

"இங்க நம்ம வீடு இருக்கும்போது ஹோட்டலுக்குப் போகலாமா?"



அவள் கேள்வியே அவள் அவர்கள் காதலுக்கு சம்மதித்துவிட்டதை சொல்லாமல் சொல்லியது.

ஒரு புது மலர்ச்சியோடு கனிஷ்கா அவனுக்குக் காபி போடச் சென்றாள்.

காஞ்சனா தன் ஸ்கொயர் ஃப்ரேம் கண்ணாடியை நெகிழ்த்தியவாறே ராமை எடை போடத் தொடங்கினாள்.

உருவப் பொருத்தம்க நன்றாகவே இருப்பதாக மனக்கவுளி சொன்னது.

வேலையிலும் பேங்க் உத்யோகம். இந்தக் காலத்தில் எந்த இளைஞனுக்கு பேங்க்கில் வேலை கிடைக்கிறது. இருப்பவர்களை வெளியே அனுப்பி வி.ஆர்.எஸ். தந்து கொண்டிருக்கிறார்கள்.

"எந்த பேங்க்ல ஒர்க் பண்றீங்க?"

"ஸ்டேட் பேங்க்.."

"உங்க ஊர்.."

"நான் பிறந்துவளர்ந்தது கோயம்புத்தூர். தற்சமயம் சேலத்துல இருக்கேன். அடுத்த மாசம் மதுரைக்கு ட்ரான்ஸ்ஃபர் ஆகி வந்துடுவேன்."

"அப்பா.. அம்மா.."

"சாரி.. இரண்டு பேருமே இப்ப இல்லை."

"யூ மீன்.."

"அம்மா இறந்துட்டாங்க. நான் பிறந்த உடனேயே அவங்களை விழுங்கிட்டேன்னு தாத்தா சொல்வார்.."

"ஓ மைகாட்... அப்பா?"

"தப்பா எடுத்துக்காதீங்க ஆன்ட்டி. அப்பாபத்தி மட்டும் எதுவும் பேச வேண்டாம்."

"ஏன்."

"ப்ளீஸ்ஸ்.."

அவன் அழுத்தமாக மறுத்தான். 'அப்படியானால் அப்பா விஷயத்தில் எதாவது கசமுசாவா..?'

காஞ்சனா முகத்தில் பூச்சி பறக்கத் தொடங்கியது.

அவனுக்கும் புரிந்தது.

"ஆன்ட்டி.."

"ஆங்.."

"இப்ப இந்த ரிசப்ஷனை நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. ரொம்ப தேங்க்ஸ்..." - கொஞ்சமாய் வழிய ஆரம்பித்தான் ராம்.

கனிஷ்காவும் காபியுடன் வந்தாள்.

"வேண்டாம்னு சொன்னேன்ல.."

"சும்மா குடிடா..." -வேகமாக 'டா' போட்டுவிட்டு பின் அம்மாவைப் பார்த்து நாக்கைக் கடித்தவளாக -

"சாரிம்மா... நாங்க இப்படித்தான் பேசிப்போம். நீ தப்பா புரிஞ்சுக்காதே" என்றாள்.

அவனும் காபியை உறிஞ்சினான்.

உறிஞ்சும்போதே நாலாபுறமும பார்த்தான்.

"வீட்டை நல்லா செட் பண்ணிட்டே கனி.." என்றான்.

காஞ்சனர் அவன் பேச்சு பார்வை இரண்டையுமே . நோட்டம் போட்டுக் கொண்டிருந்தாள்.

அப்பா பற்றிய கேள்விக்கு அவன் பதில்



சொல்லாமல் நழுவியதில் மனது போய் முட்டிக்கொண்டு நின்றது.

"எதாவது தப்பான சிக்கலான விஷயமாக இருக்குமோ..?'

காஞ்சனா கேள்விக் கயிற்றில் ஆடினாள்.

கனிஷ்காவோ மாடிப் படியருகில் போய் நின்றவளாக மாடிக்கு வரும்படி சைகை செய்தாள்.

"எக்ஸ்யூஸ் மீ.."-என்று அவனும் எழுந்து அவளைப் பின்தொடர்ந்தான்.

மொட்டை மாடியில் ஈரத்துணிகள் காய்ந்து கொண்டிருந்தன. கைப்பிடிச் சுவர்மேல் காக்கை ஒன்று ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. ஆன்ட்டனா மேல் ஒரு அணில்!

"கனி... என்ன நடக்குது இங்க! காலைல நீ போன் பண்ணினதுக்கும் இப்ப உன் வீட்ல நான் பாக்கறதுக்கும்சம்பந்தமில்லையே.."

அவன் கனிஷ்காவைக் கிளறியபடி கைப்பிடிச் சுவர்மேல் சாய்ந்து நின்றான்.

"ஆமாம் ராம். அம்மா அடிக்கடி ஒருவிஷயம் சொல்வாங்க. எதுஎப்ப நடக்கும்னு யாராலையும் சொல்ல முடியாதுன்னு. நான் அப்பல்லாம் சிரிச்சுப்பேன். ஆனா அது உண்மைதான் போல இருக்கு-"

"சரி... என்னதான் நடந்தது. உன் அம்மா சூய்சைட் அட்டெண்ட் பண்ணாங்கன்னு சொன்னியே.."

"ஆமா.. அம்மாக்கு இது மறு ஜென்மம்."

"என்ன பிராப்ளம்.. ஏன் அவங்க அப்படி நடந்து கிட்டாங்க?"

"அம்மா பாஷைல சொல்லப்போனா தலையெழுத்து. என் கருத்துப்படி ஜஸ்ட் தட் வாஸ் எ இன்சிடென்ட். சாரி.. ஆக்சிடென்ட்.."

"விபரமா சொல்றியா..?"

"கட்டாயமா.. கேட்டா மூக்குமேல விரல் வைப்பே."

"முதல்ல சொல்லு கனி.."

"நான் சொல்றதவிட முக்கியம் - பதிலுக்கு நீ சொல்லப்போற சம்மதம்.."

"என்ன சம்மதம்..? எதுக்கு சம்மதம்..?"

"சொல்றேன்... உன்னை மலைபோல நம்பித்தான் இப்ப நான் சில விஷயங்களை சொல்லப் போறேன்."

"பீடிகை போதும். விஷயத்துககு வா.."

ராம் அவளைத் துரிதப்படுத்த அவளும் ஆரம்பித்தாள்!

## 10 காதல்! இது ஒரு 'மதில்மேல் பூனை!'

**ச**ந்துரு என்கிற அந்த சந்திரசேகர் முகத்தில் ஒரு புது மலர்ச்சி. மரகதத்துக்கு அவரை அந்தமாதிரி பார்ப்பது மகிழ்ச்சியளித்தது. கூடவே அவள் மகள் அகிலா..

"மாமா...கல்யாணமா உனக்கு?" என்று ஒருமாதிரி இழுவையான குரலில் கேட்டுவிட்டு சிரித்தாள்.

"அக்காபாருக்கா.." சந்துருவிடமும் சின்ன குழந்தை போல சிணுங்கல்.



"வாய மூடுடி.. இபப் என் தம்பிக்கு என்ன வயசாயிடிச்சு. 48 நடக்குது. இது ஒரு வயசா?"

"அம்மா... ஏன் இப்படி வயசை எல்லாம் சொல்லி சமாளிக்க நினைக்கறே. மாமாவோட காதல் வயசை எல்லாம் கடந்தது. காதலுக்கு எப்பவுமே தோல்வி யில்லைன்னு கவிஞர்கள் சொல்றதை மாமா மெய்யாக்கப் போறார்.."

அகிலா அழககா எடுத்துக் கொடுத்தாள்.

"என்னமோடா.. இந்த யங் ஜெனரேஷன் இப்படி பிராட் மைண்டோட இருக்கறத நினைச்சா எனக்கு ஒரே ஆச்சரியமாத்தான் இருக்கு.."

"எக்ஸ்போஷர்மா.. எக்ஸ்போஷர்! உங்க காலத்துல ரேடியோ நாடகம்தான். இப்ப மெகா சீரியல் காலம். எவ்வளவு கேரக்டர்ஸ், எவ்வளவு பிராப்ளங்களை அதுல பாக்கறோம்..எல்லாத்தையும் பார்த்து எவ்வளவு குழம்பிப் போயிருப்போம்! அவ்வளவு தூரம் குழம்பினதுக்கு இந்தத்தெளிவுகூட இல்லைன்னா எப்படி?"

"பாத்தியாடா.. இப்படி வாயடிக்கறாளே. இவளுக்கு வர்றவன் என்ன பாடுபடப் போறானோ?"

"அவனும் வாயாடியா இருந்தா அவ்வளவுதான்."

"என்ன அவ்வளவுதான். எங்களுக்கு யார்கிட்ட எப்படி நடந்துக்கணும்னு தெரியும். நாங்க திருநெல்வேலிக்கே அல்வா கொடுக்கற பார்ட்டி தெரிஞ்சுக்கோ.."

"போதும்டி சந்துரு நாம விஷயத்துக்கு வருவோம். சம்பினா ரிஜிஸ்டர் மேரேஜ் போதும்கறே-அதுக்கு முந்தி அந்தப் பொண்ணும் அவ லவ்வரும் 'கல்யாணம் பண்ணிகிட்டாகணும்னு சொல்றியே.. அவங்க கல்யாணமாவது தடபுடலா நடக்கலாமா இல்லை அதுவும் ரிஜிஸ்தர் மேரேஜ்தானா?"

"அக்கா அவங்க கல்யாணம் நல்லவிதமா ஊரே பார்க்கும்படி நடக்கணும். அதுரொம்ப முக்கியம். அது அப்படி நடக்கலைன்னா எங்க கல்யாணம் பத்தி யோசிச்சுடப் பாக்காதீங்க."

"சரி- இந்த விஷயத்தை நான் ஸ்ட்ராங்காவே சொல்லிட்றேன். அதேசமயம் நீங்க அதுவரை காத்து கிட்டிருக்கணுமே-"

"அக்கா... இருபத்தஞ்சு வருஷமா காத்துகிட்டிருந்த எனக்கு இனி காத்திருக்கறதுதானா பெரிய விஷயம்."

சந்துரு அந்தக் கேள்வியின் பெருந்தன்மையில் விஸ்வரூபாம் எடுத்தான்.

மரகதத்துககே அந்தை பார்க்கக் கண்கள் கலங்கி விட்டன!

**மொ**ட்டை மாடி!

கனிஷ்கா தன் தாயின் காதல் பற்றிய உண்மைகளை சொல்ல முடித்திருந்தாள்.

ராமிடம் ஸ்தம்பிப்பு.

"என்னப்பா இடிச்சப்புளி மாதிரியாயிட்டே"

"ஐ ஆம் சாரி கனி... என்னால நம்பவே முடியலை. நீ சொன்னதெல்லாம் சினிமா சம்பவம்



மாதிரியே இருக்கு இப்படி எல்லாம் கூட நடக்குமா?"

"நடக்க முடியாத ஒண்ணை எந்த மனுஷனாலையும் கற்பனைகூட பண்ணிப் பார்க்க முடியாது ராம். எங்கேயோ எப்பவோ யாருக்கோ நடந்ததைத்தான் ஒவ்வொருத்தரும் நினைக்கறோம். அதை அபூர்வம்னு நாமதான் சொல்றோம்.

ஆனா இந்த உலகம் இந்த மாதிரி லட்சம் கோடி அனுபவங்களைப் பார்த்திருக்கும்."

"வாஸ்தவம்தான். சரி இப்ப நான் என்ன பண்ணணும்கறே?"

"என் அம்மாவுக்குக் கல்யாணம் ஆகணும்னு நான் நினைக்கறது ஒண்ணும் தப்பில்லையே-"

"உனக்கு ரொம்ப ரொம்ப பெரிய மனசு கனி- இதைவிட வேற என்ன நான் சொல்ல-?"

"அம்மா விதி, ஊர்னு ரொம்ப பயப்பட்றாங்க."

"இனி என்ன பயம். இனியாவது அவங்க நல்லபடி வாழட்டும்- அவங்க விதியை நாம பிரேக் பண்ணுவோம்."

"ராம்-"

"என்ன கனி-"

"நீயா விதியை பிரேக் பண்ணுவோம்னே-?"

"இந்த மாதிரி விஷயத்துல பண்ணத்தான் வேணும். நம்ம காலம் வேற, நம்ம அம்மா அப்பா காலம் வேற."

"ராம்..."-கனிஷ்கா நெகிழ்ந்து போய் அவனை அப்படியே இழுத்து அணைத்துக்

சுட்டிக்கொண்டாள். அப்படியே "என்னதான் உன்மேல நான நம்பிக்கை வெச்சுருந்தாலும் ஒருபக்கம் நீ எதாவது நெகடிவா சொல்லிட்டா என்ன பண்றதுன்னு பயந்துகிட்டே இருந்தேன் தெரியுமா?" -என்றாள்.

"போதும்... முதல்ல அவங்க மேரேஜ்... அப்புறம்தான் நம்ம மேரேஜ்."

"ஆனா அம்மா தலைகீழா சொல்றா. முதல்ல நம்ம மேரேஜாம். அப்புறம்தான் அவங்க கல்யாணம் பண்ணிப்பாங்களாம்."

"இல்ல கனி... உங்கம்மா நாம கல்யாணம் செய்துக்கணும்கறதுக்கா அப்படிச் சொல்லலாம். அப்புறம் பல்டி அடிச்சா என்ன செய்யறதாம்."

"ஓ- நீ அப்படி வர்றியா?"

"ஆமாம்... எப்ப தலை எழுத்து, விதி, ஊர் சிரிக்கும்னு சொஸைட்டி பத்தியே கவலைப் பட்றாங்களோ இவங்களை நம்ப முடியாது."

"அதனால..."

"அடிச்சு சொல்லிடு. முதல்ல அவங்களுக்கு கல்யாணம். பிறகுதான் நமக்குன்னு..."

"தேங்க்ஸ்டா..." -திரும்பவும் ஒருமுறை அவனை இழுத்து அணைத்தாள் கனிஷ்கா.

"கனி நான் இப்ப ரொம்ப லேசா ஃபீல் பண்றேன் தெரியுமா..."

"நானும்தான்."

"எங்க அந்த குச்சி ஜோசியக்காரி உளறின மாதிரி நடந்துடுமோன்னு மனசுல ஒரே பயம் எனக்கு."



"போதும்... இப்ப எதுக்கு அந்த பேச்சு. நாம விதியை திருத்தி எழுதறவங்கங்கறததான் ப்ரூஃப் பண்ணப் போறோமே..."

"போ... போய் முதல்ல விஷயத்தைச் சொல். தாமதிக்காதே. நாளைக்கே அவங்களுக்கு ரிஜிஸ்தர் ஆபீஸ்ல கல்யாணத்தைப் பண்ணி வெச்சிடுவோம்."

"நாமளே சாட்சிக் கையெழுத்து போடலாமா?"

"ஒய்நாட்... பெரியவங்கதான் பிள்ளைகளுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கணுமா. நாமளும் பண்ணி வைக்கலாம் கனி."

"தேங்க்யூடா... தேங்க்யூ ஸோமச். உனக்கும் எனக்கும் என்னமா வேவ் லெங்க்த் ஒத்துப் போகுது பார்த்தியா?"

"சரி... நான் கொஞ்சம் படுத்து ரெஸ்ட் எடுத்துக்கறேனே..."

"ஷ்யூர் ஷ்யூர்! அதுக்கு முந்தி ஒரு விஷயம்."

"என்ன..."

"எனக்கு அப்பாவா வரப்போறவரை நீ பார்க்க வேண்டாமா?"

"இப்பவா..."

"ஆமாம்... பக்கத்து வீட்லதான் இருக்கார். வா அறிமுகப்படுத்தி வைக்கறேன்."

"அவசரப்படாதே. நாளைக்கு ரிஜிஸ்தர் ஆபீஸ்லையே அவரை நானும், என்னை அவரும் பாக்கட்டுமே. ஒரு த்ரில்லை எதுக்குவேஸ்ட் பண்றே...?"

"அப்படிங்கறே...?"

"அப்படியே தாங்கறேன்."

"சரி... நீ போய் படு. கீழேயே பெட்ரூம் இருக்கு. நான் மற்ற விஷயங்களுக்கு இவங்களைத் தயார் படுத்தறேன்."

"உன் அம்மா ஏதாவது முடியாது கிடியா துன்னா சொல் நான் நேர்ல வந்து சொல்றேன்..."

"இது போதும்... இது போதும்டா எனக்கு..."

கனிஷ்கா துள்ளிக் குதித்தபடி ஓடினாள். அவனும் சிரித்தபடியே பின்தொடர்ந்தான்.

அந்த வேளை பார்த்து தன் வீட்டு மொட்டை மாடிக்கு வந்த சந்துருவுக்கு அவன் முதுகுதான் தெரிந்தது! அதனால் சன்னமாக ஒரு ஏமாற்றம்கூட!

ரிஜிஸ்டர் ஆபீஸ்!

கனிஷ்காவின் பிடிவாதமும் தீர்மானமும் எப்படியோ ஜெயித்துவிட்டது.

உலக அதிசயங்களில் ஒன்றாக மகளே தாய்க்கு திருமணம் நடத்தும ஒரு அரிய காட்சி சில நிமிடங்களில் நடந்து முடியப் போகிறது.

மாலை வாங்கிக்கொண்டு ரிஜிஸ்தர் ஆபீசுக்கு வந்து விடுவதாகக் கூறிச் சென்ற ராமுக்காக கனிஷ்கா காத்திருக்க, மற்வர்களிடம கலகலப்பான பேச்சும் சிரிப்பும்!

சந்துரு என்கிற சந்திரசேகரன் பட்டுவேட்டி சட்டையில் இருக்க, அதிக அகலமில்லாத கரை கொண்ட பச்சை பட்டுப்புடவையில் காஞ்சனா அவனோடு நின்று பேசிக்கொண்டிருந்தாள்.

அந்தக் காட்சி கனிஷ்காவுக்கு பெருமிதத்தையும் ஆனந்தத்தையும் அவளுக்குள் சுரக்கவிட்டுக் கொண்டிருந்தது.



மரகதம், அவள் கணவர், அகிலா என்று மற்றவர்களும் ஒரு புதிய பொலிவுடன் நடக்கப் போவது ஒரு அரிய சம்பவம் என்கிற மாதிரி எதிர்பார்ப்பில் நின்று கொண்டிருந்தனர். பத்திரிகைக்காரர்களுக்கும் தகவல் போயிருந்தது. கேமராவும் கையுமா வந்து காத்திருந்தனர். அதிகம் காக்க வைக்காமல் ராமும் நல்ல தடித்த இரு மாலைகளுடன் வந்து சேர்ந்தான்.

ரிஜிஸ்தர் ஆபீசுக்குள் நுழைந்தவன் பட்டு வேட்டியில் தெரிந்த சந்திரசேகரைப் பார்த்து ஒரு விநாடி அப்படியே விதிர்த்துப் போனான்.

உள்மனசுக்குள் 'அப்பா..' என்கிற சொல் ஒரு அணுகுண்டுபோல வெடித்தது. அதேசமயம் கையில் உள்ள மாலையை கனிஷ்கா வேகமாக வாங்கி இருவரிடமும சென்று நீட்டினாள்.

ராம் இதயம் அந்த நொடிகளில் தாறுமாறாகத் துடிக்க ஆரம்பித்தது.

தன் தாய் சந்திரசேகரிடம் விவாகரத்து வாங்கிக் கொண்டு திரும்பிய அன்றே மயங்கி விழ, அதை சாதாரண அதிர்ச் மயக்கம் என்று தாத்தா கருத, பின்னர்தான் அது பிள்ளை மயக்கம் என்பது தெரியவந்ததாக தாத்தா சொல்லியிருக்கிறார்.

ஆனால் இந்த விஷயமெல்லாம் சந்திரசேகருக்குத் தெரியாது. சொல்லப்போனால் ராமின் அம்மா வானவள் பிள்ளைப் பேற்றுக்கு உள்ளாகியிருக்கிறாள் என்பதேகூட அவருக்குத் தெரியாது.

இறுதியில் பிரசவத்தில் அம்மாபோய்ச் சேர்ந்துவிட அதன்பின் தாத்தாதான் ராமுக்கு எல்லாம். ஒரு பத்து வயது இருக்கும்போது, "யார் தாத்தா என் அப்பா?" என்று அவன் கேட்க -

மென்று விழுங்கியவர், பதினைந்து வயது வரை சமாளித்தார். பிறகு முடியாமல் எல்லா உண்மைகளையும் கூறி அவன் தாய் தந்தையின் கல்யாணப் போட்டோ ஒன்றை மட்டும் பாதுகாத்து வருவதாகக் கூறி அதைக் காட்டினார்.

அதன்பின் அது அவன் மணிபர்சுக்கு இடம் மாறி விட்டது. அதை எடுத்து ஒருமுறை சந்திரசேகர் தானா என்று அவன் பார்க்கவும் தொடங்கினான். அந்த நொடியில் அவன் கழுத்தில் ஒரு மாலை விழுந்தது.

திடுக்கிட்டான்.

நிமிர்ந்தான்.

அருகில் சந்திரசேகர்தான். எதிரில் அவனைப் போலவே மாலையும் கழுத்துமாய் கனிஷ்கா, அதேசமயம் சந்திரசேகர் ஒரு தீர்மானத்தோடு பேசத் தொடங்கினார்.

"கல்யாணம்கறது ரொம்பப் பெரியவிஷயம். ரொம்ப ரொம்ப ஜீவனுள்ள அபூர்வமான விஷயமும்கூட. இல்லேன்னா தாலி கட்றதுக்கு முன்வரை எந்தவித பரிச்சயமும் இல்லாத நிலையிலுள்ள இரண்டு பேர் ஒருத்தரை ஒருத்தர் 'எனக்கு நீ - உனக்கு நான்'னு நம்பி உயிரோட உயிரா கலக்க முயற்சி செய்வாங்களா?

பெற்ற தாய் தந்தை எதிர்க்ககூட மாராப்பு விலகிட்டா கூசிப் போயிட்ற ஒரு பொண்ணு சுத்தமா முன்பின் தெரியதவன்கிட்ட தன்னை அப்படியே ஒப்படைக்கற கல்யாணம்கற சடங்கு ரொம்ப ரொம்பப் பெரிசு.

அதுல மட்டும் பிழையே வந்துடக் கூடாது.



அது ஆயிரம் காலத்துப் பயிர்னு சொன்ன பெரிய வங்க வாய்க்கு சக்கரைதான் போடணும். அப்படி ஒரு பவித்ரமான உறவுக்கு நானும் சரி, காஞ்சனாவும் சரி தகுதியில்லாமப் போய்ட்டோம்.

அதனாலதான் எங்க தனிப்பட்ட திருமண வாழ்க்கைலையும் வெற்றி கிடைக்கலை, எங்க காதலுக்கும் வெற்றி கிடைக்கலை.

கறுப்பாவோ இல்ல முடமாவோ பொறந்துட்டா அதை நாம் ஒத்துகிட்டு வாழத் தொடங்கிட்றோம். அதே மாதிரிதான் வாழ்க்கைல சில நல்ல விஷயங்கள் நடக்காத போதும் நடந்துக்கணும்.

அதை எதிர்த்துப் போராடி வலுக்கட்டாயமா அடையற வெற்றியை விட, அதை மனப்பக்குவத்தோட ஏத்துக்கறதுல தான் அதைவிடப் பெரிய வெற்றி கிடைச்சிடுது.

இப்ப இங்கேயும் நானும் காஞ்சனாவும் அப்படி ஒரு பெரிய வெற்றிக்குத்தான் ஆசைப்பட்றோம். குறிப்பா நாங்க சேரணும்னு ஆசைப்பட்ட இந்தஇளைய ஜோடிகள்தான் முதல்ல சேரணும.

இந்த விஷயத்துல இவங்கள பெரியவங்களாக விடக்கூடாது. விட்டாநாங்க இவ்வளவு நாள் வாழ்ந்ததுக்கு அர்த்தமே கிடையாது.

எங்களுக்கு நேர்ந்த கசப்பான அனுபவங்கள் காரணமா எந்த காதல் ஜோடியையும் நாங்க பிரிக்க விரும்பலை. குறிப்பா அம்மா மகளுக்கும் பிள்ளை அப்பாவுக்கும் அறுபதாம் கல்யாணம் வேணா பண்ணி வைக்கலாம். இருபதுல நடக்க வேண்டியதை அவங்க பண்ணி வைக்கவே

கூடாது..."

சந்திரசேகரின் உறுதியான பேச்சினால் எல்லோரிடமும் ஸ்தம்பிப்பு.

ராம் அவரை திணறலோடு பார்த்தான்.

"மொட்டை மாடில நின்னுகிட்டிருந்த கனிஷ்காவுக்கு ரயில்வே லைன்ல இருந்து 'ஐ லவ் யூ சொல்லு'ன்ன நீ கத்தினப்பவே நான் உன்னை பார்த்துட்டேன். அந்தநிமிஷம் இவ அம்மாகிட்ட நான் தோத்தமாதிரி இவகிட்ட நீயும் தோத்துடக் கூடாதுன்னு தான் நினைச்சேன்.

என்னை வேணும்னா நீ ரொம்ப தாமதமா தெரிஞ்சிகிட்டிருக்கலாம். ஆனா உன்னை நான் சிறு பிள்ளைலயே தெரிஞ்சுகிட்டேன்.

'என் பிள்ளைய என்கிட்ட கொடுத்தா என்ன'ன்னு உன் தாத்தாகிட்ட கூட ஒருநாள் சண்டை போட்டேன்.

'முறிஞ்ச உறவு முறிஞ்சதாவே இருக்கட்டும். இனியாவது நீங்க நிம்மதியா வேற ஒரு பொண்ணோட வாழப் பாருங்கன்னு அவர் சொல்லிட்டுப் போய்ட்டார். கோயமத்தூரை விட்டுப் போன அவர் அதுக்கப்புறம் எங்க போனார்னே தெரியல... காஞ்சனா உன்னைப் பற்றிப பேசின பிறகுதான் என் சந்தேகமும் தீர்ந்தது. ஆனா நீ திரும்பி வந்த நிலைல இப்ப புரியது- தண்ணி அடிச்சு தண்ணி விலகாதுன்னு!"

சொன்ன ஜோரில் கட்டிக் கொள்ளவும் செய்தார். அப்படியே கனிஷ்கா பக்கம் திரும்பி "மகளாக விரும்பினே- ஒரு சின்ன மாற்றத்தோட மருமகளாகப் போறே - அவ்வளவுதான்! ஆனா விதியை பிரேக் பண்றேன்னுல்லாம் எனர்ஜியை வேஸ்ட் பண்ணாதே" என்றார்.



அதன்பின் திருமணமும் முறைப்படி நடந்து முடிந்தது. ரிஜிஸ்தரார் முகத்தில் அலாதியான புன்னகை. சந்திரசேகரைப் பார்த்து "உங்க பேச்சுல நல்ல சிந்தனை சார். நீங்க நல்ல மேடைப் பேச்சாளரா திகழமுடியும்..." என்றார்.

"தேங்க்யூ" -என்றபடியே ரிஜிஸ்தர் ஆபீஸை விட்டு வெளியே வந்தனர்.

ராம் சொல்லமுடியாத அளவு சந்தோஷத்தில் இருந்தான், ஒரே நாளில் அவனுக்கு அப்பா மனைவி என்று இரண்டு பேரை கடவுள் பரிசாகக் கொடுத்து விட்டதால் வந்த சந்தோஷம் அது.

"கனி... இனின்குக் என் வாழ்க்கைல ஒரு திருப்பு முனையான நாள். கடவுளுக்கு நன்றி சொல்ல விரும்பறேன். நாம கோவிலுக்குப் போறோம்" - என்றான் கனிஷ்கா காதில்.

"அப்படியே அங்க அந்த ஜோசியக்காரி கண்ணுல பட்டா லெஃப்ட் ரைட் வாங்கறோம். அவளும் அவஜோசியமும்..." -என்றாள்.

"ஆமாமா- அவளை விடக்கூடாது- தேடிப் பிடிச்சாவது அவளை தாளிச்சுடணும்" என்றான் அவனும்.

**மீ**னாட்சியம்மன் கோயிலின் ஆடி வீதி.

ராமும் கனிஷ்காவும் நடந்து வந்து கொண்டிருந்த போது கழுத்தில் மீனாட்சி படம் ஒன்றை மாட்டிக் கொண்டு, நாக்கலும் ஒரு திரிசூலத்தைக் குத்திக் கொண்டு கையில் ஒரு மஞ்சள் துணி விரித்த தட்டுடன் பிச்சை எடுத்தபடி வந்து கொண்டிருந்தாள் ஒரு பெண்.

எதாவது நேர்த்திக் கடனாயிருக்கும் என்றுதான் மற்றவர்களுக்குத் தோன்றியது

ஆனால் ராமுக்கு அவள் யார் என்பது தெரிந்துவிட்டது.

"ஏய் ஜோசியக்காரி.." என்றான்.

அவள் வெலவெலத்துப் போனாள்.. ஏதோ பேயைக் கண்டுவிட்டவள் போல ஓடத் தொடங்கினாள். துரத்த முயன்றவனைப் பிடித்து இழுத்த கனிஷ்கா "போதும் விடு ராம்.. ஜோசியம் பொய் இல்ல; ஜோசியக்காரிதான் பொய் இங்க.." என்றவள். "எனக்குகூட அடிமனசுல இவ சொன்னது பலிச்சிடுமோன்னு ஒரு பயம் இருந்துச்சு. நல்லவேளை..." என்று லேசாய் கன்னத்தில் வேறு போட்டுக் கொண்டாள்.

அப்படியே பலிச்சிருந்தாதான் என்ன இப்ப.. என் அப்பாமாதிரி நானும் காலம் பூரா காத்துகிட்டிருந்துருப்பேன் உனக்காக.. அப்பா மோசம். அவர் தப்பிச்சு கிட்டாரு - என்னை மாட்டிவிட்டுட்டாரு.நான் இனி என்ன பாடெல்லாம் உன்கிட்ட படப்போறேனோ.."

அவன் வேடிக்கையாகச் சொல்லவும், கனிஷ்கா முகம் சிவந்து போனது. உற்றுப் பார்த்து ஒருமுறை முறைத்தவள் -

"இப்பகூட ஒண்ணும் கெட்டுப் போயிடல போடா - நீ போடா.. சாமியாரா போவேன்னு இந்த ஃப்ராடு ஜோசியக்காரி சொன்ன மாதிரியே சாமியாராயிடு... போ... போடா..." என்று அவனைத் துரத்த, அவனும் 'ஏய் ஏய்...' என்றபடியே ஓட அதை ஆடி வீதியே திரும்பிப் பார்த்து ரசித்தது.

**முற்றும்**